5

ஸ்ரீ பர்வத வர்த்தனி

ஆசிரியர் : V. M. நடேச நாட்டார்

மலர் 1	ஹேவிளம்பி ஆனித் திங்கள் ஜூன் 1957	இதழ் 10

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JUL 1957
MADRAS

பொருளடக்கம் — பக்கம்

1. சென்னை ராஜ்ய பருவத. சங்கம் 26-வது மாநாடு அறிக்கை ... 291
2. பெண்ணின் இலட்சணம் ... 294
3. வைத்தியம் ... 297
4. "ஊழ் வினை" ... 299
5. சோகத்தின் எல்லையிலே? ... 302
6. புகலிடம் ... 305
7. சென்னை ராஜ்ய பருவத. சங்கம் 26-வது மாநாடு தலைமைச் சொற்பொழிவு ... 307
8. சென்னை ராஜ்ய பருவத, சங்கம் 26-வது மாநாடு ... 316
9. தீர்மானங்கள் ... 319

JL
M57.1
187253

சென்னை மாகாண
ராஜகுலசங்கம்
மாத வெளியீடு

விலை 4 அணா

சென்னை மாநில முதலமைச்சர் கனம் திரு. K. காமராஜ் நாடார் அவர்களும், சென்னை மாநில க்ஷேமநல அமைச்சர் கனம் திரு. P. கக்கன் அவர்களும் 11—6—57-ல் தென்னாற்காடு மாவட்ட சிதம்பரம் தாலூக்கா காட்டுமன்னார்கோயிலுக்கு விஜயம் செய்தபோது

சென்னை மாகாண பர்வதராஜகுல ஏழை மாணவ இலவச ஹாஸ்டல் இல்லக் கமிட்டியார் வாசித்தளித்த

வரவேற்பு நல்லுரை.

அருள்சால் முதலமைச்சர் அவர்களே! வருக வருக!

வெற்றியோடு என்றும் விளங்கும் தர்மவீரராம் முதலமைச்சர் அவர்களே வருக உங்களை நெஞ்சார வாழ்க என வாழ்த்தி வரவேற்கின்றோம்.

தன்னலங் கருதா முதலமைச்சர் அவர்களே!

கருதும் காரியங்களை எளிதில் முடிக்கும் ஆற்றல் பெற்றுள்ளீர். நீவிர் தாழ்த்தப்பட்டவர்களின் துன்பங்களை நன்கு உணர்ந்துள்ளீர்கள். தாழ்த்தப்பட்டவரை மற்ற சமூகங்களோடு சரி சமமாக பங்குகொள்ள செய்யும் பாட்டாளியின் பிதாவே! அரசியலிலும், பொருளாதாரத்திலும் மிக பிற்போக்கான நிலைமையில் உள்ள, மீனவராம் எங்களைவிட தாழ்த்தப்பட்டவர் எவருமில்லை என்று சொல்ல வேண்டுவதில்லை, சாதாரண பஞ்சாயத்துப்போன்ற பொதுநலப் பணிகளில் அங்கம் வகிக்க அருகதையற்றுகிடக்கும் இச்சமூகத்தினை உயர்த்த தாங்கள் தக்கதொரு சூழ் நிலையை எங்களுக்கு செய்துதர வேண்டுகிறோம். ஆம் அன்று 13—5—56-ம் தேதியில் சென்னையில் நடைபெற்ற சென்னை மாநில பர்வதராஜகுல சங்கத்து வெள்ளி விழாவில் தாங்கள் மீனவருக்கு ஒரு ஸ்தானம் மேல் சபையில் ஒதுக்கப் போவதாக வாக்களித்ததை என்றும் மறவோம்.

தன்னலங்கருதா ஹரிஜன க்ஷேமநல அமைச்சர் அவர்களே வருக வருக!

[illegible] குணக்குன்றே! உழைப்பால் உயரலாம் என்பதற்கு [illegible] எடுத்துக்காட்டு. இனி தாழ்த்தப்பட்ட சமூகத்தில் ஒரு புதி[illegible] றினை அமைச்சராம் தங்கள் வருகையால், உண்டாக்கும் [illegible] ஐயமில்லை.

ஆதரவு அளித்திடும் அமைச்சர் அவர்களே!

இம்மாகாணத்திற்கே மீனவர்க்கென்று ஒரே ஹாஸ்டல் இல்லம், நடைபெற்றுவருவது தாங்கள் அறிந்ததே. நாங்கள் இவ்வொரு இல்லத்[illegible] சிறப்பாக நடத்த இயலாமல் தவிக்கின்றோம். இனிது நடைபெ[illegible] வகை அருளுமாறு இறைஞ்சுகின்றோம்.

மீனவர் நலத்தின் மேன்மை காண்போய்!

இல்லத்தின் மேற்பகுதி கூரையாக இருந்துவருகின்றது. மேற்பகுதி ஸிமெண்டு ஓடுபோட்டால் ஒரு முழுமாதிரி இல்லமாக திகழும். இல்லத்துடன் திகழும் காய்கறி தோட்டத்திற்கு நீர் இறைக்க "பம்ப்செட்" ஒன்று அமைக்கவேண்டும். இல்லத்தில் தங்கி உணவு மட்டும்பெறும் மாணவர்கள் கல்வி பயிலுவதற்கு வேறு இடங்களை நாடிச்செல்கின்றனர். உணவும் கல்வியும் தொழிலும் ஓரிடத்திலேயே அளிக்கப்படின் மாணவர்கள் நல்லதொரு சூழ்நிலையை பெறுவர் என்பது உறுதி இத்தகைய குறை பல உண்டு. வறுமை முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது. நீங்களிருவரும் ஒருமுறையேனும் இவ் இல்லத்தை பார்வையிட வேண்டுகிறோம்.

பொதுநலம் இயற்றும் புண்ணிய சீலர்களே!

இவ்வில்லம் இனிதோங்க வகைகூறும் தங்கட்கு நீடிய ஆயுளும், நிறைசெல்வமும் உயர்புகழும் அருள ஸ்ரீ வீரநாராயணப்பெருமாளின் சீரடிப்போதுகளை மனமெய் மொழிகளால் வாழ்த்துகின்றோம்.

வாழ்க உங்கள் புகழ்! வளர்க நம் தமிழ்.

இங்ஙனம் **பர்வதராஜகுல ஹாஸ்டல் இல்லக் கமிட்டியார்.**

சென்னை ராஜ்ய பருவதராஜகுலசங்க 26-வது மாநாடு 16—6—57.

மாநாட்டுக் குழுவினர்கள்.

சென்னை ராஜ்ய பருவதராஜகுலசங்க 26-வது மாநாடு 16—6—57.



மாநாட்டுத்தலைவர்.
திரு. V. M. நடேச நாட்டார்.

மாநாட்டுத்திறப்பாளர்.
ஸ்ரீமதி லூர்து அம்மாள் சைமன் (அமைச்சர்.)

187253

உ
பராசக்தி துணை
" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

பர்வத வர்த்தனி

" எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே".

மலர் 1	ஹேவிளம்பி ஆனித் திங்கள் ஜுன் 1957	இதழ் 10

சென்னை ராஜ்ய பருவதராஜகுல (உள்நாட்டு மீனவர்) சங்கம்

26-வது மாநாடு அறிக்கை.

தெய்வத் திருவருள் துணைகொண்டு சென்ற ஆண்டு மே மாதம் 13, 14 தேதிகளில் நடைபெற்ற வெள்ளி விழாவுக்குப் பின்னர் சென்னை சிந்தாதிரிப்பேட்டை பழநி ஆண்டவர் தெருவு 15-A. நம்பருள்ள இல்லத்தில் சென்னை மீன் இலாக்கா டிப்டி டைரக்டர் மிஸ்டர் D. D. பீட்டர் தேவதாஸ் B.A, அவர்கள் தலைமையில் 3—6—1956-ல் சென்னை ராஜ்ய பருவதராஜகுல சங்க அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது.

வெள்ளி விழாவில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்கள் யாவையும் அச்சிட்டு சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன. அதன் சம்பந்தமாக முதல் அமைச்சர் கனம் காமராஜர் அவர்களையும், மீன் இலாகா அமைச்சர் கனம் பக்தவத்சலம், B.A., B.L., அவர்களையும், நிதி அமைச்சர் கனம் C. சுப்ரமணியம், B.A., B.L., அவர்களையும், அடிஷனல் டைரக்டர் அருள்தாஸ் I.A.S. அவர்களையும், கல்வி இலாகா டைரக்டர் சுந்தரவடிவேலு M.A., L.T., அவர்களையும் பேட்டிகண்டு விஷயங்களை எல்லாம் விளக்கிச் சொல்லப்பட்டன. ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு உதவி புரிவதாக வாக்களித்துள்ளார்கள். ஆனால் நாளது வரையில் எந்தவிதமான பயனும் அடைந்ததாகக்காணோம்.

சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீ பழநி நிலையத்தில் விவசாய மீன் இலாக்கா அமைச்சர் கனம். M. பக்தவத்சலம் அவர்கள் ஜினிவா மாநாட்டிற்குச் சென்று திரும்பி வந்தபின்னர் அவரை வரவேற்று ஓர் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

சென்ற ஆண்டிலிருந்து இதுவரையில் 1-7-56, 12-8-56, 9-12-56, 24-2-57, 24-3-57, 5-5-57, 26-5-57 முதலிய தேதிகளில்

32
MO11, X15C8P
10

7 காரியக் கமிட்டிக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவைகளில் 6 கூட்டங்கள் சென்னையிலும் காட்டுமன்னார்குடி ஊண் இல்லத்தில் ஒரு கூட்டமும் நடைபெற்றிருக்கின்றன. இக்கூட்டங்களின் நடவடிக்கைகளை அதன் சம்பந்தமான அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளோம்.

காரியக் கமிட்டியின் தீர்மானப்படி சங்கத்தின் சார்பாக எல்லாப் பொறுப்புக்களையும் உயர்திரு. V. M. நடேச நாட்டார் அவர்கள்டமே ஒப்படைத்துப் பருவதவர்த்தனி மாத இதழ் 1956 செப்டம்பரிலிருந்து நடைபெற்று வருகின்றது.

அரசாங்கத்திற்குப் பல தீர்மானங்கள் அனுப்பியும் எந்தவிதமான பதிலும் இல்லை. நமது சர்க்கார் பருவதராஜ குலத்தினர்க்குக் கல்விச் சலுகை அளித்துள்ளார்கள். அந்நன்றியை நாங்கள் என்றும் மறவோம்.

மீன் இலாக்காவுக்குப் பல விண்ணப்பம் செய்துகொண்டோம். அவைகளுக்காக அவர்கள் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை.

அகில இந்திய மீன்வள மாநாடு 1956 செப்டம்பர் 19, 20, 21 தேதிகளில் சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்றபோது உள்நாட்டு மீனவர்களாகிய நமக்கு எந்தவிதமான அழைப்பும் அனுப்பப்படவில்லை. அதைக்குறித்து 2-4-56-ல் அம்மீன்வள மாநாட்டில் நடைபெற்ற தீர்மானங்களை அனுப்பும்படி எழுதிய விண்ணப்பத்திற்கு இதுவரை யாதொரு பதிலும் இல்லை. 2வது ஐந்தாண்டு திட்டத்தில் 3 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகத் தெரிகிறது. இதில் உள்நாட்டு மீனவர்களுக்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டதற்கு எந்தவிதமான பதிலும் இல்லை.

1956—57 நிர்வாக அறிக்கையையும், பட்ஜெட் காப்பியையும் அனுப்பச்சொல்லி அனுப்பிய தீர்மானத்திற்கு இதுவரை பதில் இல்லை.

உள்நாட்டு மீன் அபிவிருத்திக்காக ஒரு டிரெயினிங் சென்டர் ஆரம்பித்து வேலையில்லாமல் தவிக்கும் உள்நாட்டு மீனவமக்களுக்குப் பயிற்சி அளிக்கும்படி மீன் இலாக்காவைக் கேட்டதற்கு அது சாத்தியமில்லையெனப் பதில் கிடைத்துள்ளது. அதற்குப் பதில் கடலில் மீன் பிடிப்பதற்குப் பயிற்சிதர தூத்துக்குடியில் ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

9-12-56 தீர்மானத்தில் பூண்டியில் மீனவர் தங்குவதற்கு ஒரு கொட்டகை போட்டுத்தரும்படி கேட்கப்பட்டதற்கு அது சம்பந்தமான பூர்வாங்க வேலை நடைபெற்றதாகத் தெரிகிறது. ஆனால் இன்னும் கொட்டகை போட்டுத் தரவில்லை.

24-2-57-ல் மீன் இலாக்கா சம்பந்தப்பட்ட புது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதும் அதன் நகல்களை சென்னை ராஜ்ய பருவத

ராஜகுல சங்கத்திற்கு அனுப்பும்படி அரசியலாரையும் மீன் இலாக்காவையும் கேட்டுள்ளோம். இதுவரையில் எதுவும் நமக்குத் தகவல்கிடையாது.

ஹரிஜன க்ஷேமநல போர்டில் உள்நாட்டு மீனவர்களுக்கு ஒரு ஸ்தானம் ஒதுக்கித் தரவேண்டும் எனக்கேட்டதற்கு ஒன்றும் பதில் இல்லை. வழக்கம்போல் அரசாங்கத்தில் கேட்ட M. L. C. ஸ்தானம், வீட்டுவசதி, விற்பனை வரி, ஜில்லா க்ஷேமநல அதிகாரி, மீன் இலாக்காவில் உத்தியோகம் வழங்கல் முதலியவைகளுக்கு ஒன்றும் பதில் இல்லை. ஒரு நியாயவிலை அரிசிக்கடைக்கு லைசென்ஸ் கேட்டிருந்தும் பதில் இல்லை.

நிற்க, 12-8-56-ல் நடைபெற்ற கமிட்டியில், சென்னை ராஜ்ய பருவதராஜகுல சங்கத்திற்குச் சென்னையில் ஒரு கட்டிடம் கட்டவோ, அல்லது வீடு வாங்கவோ நிதிதிரட்ட ஒரு கமிட்டி ஆரம்பிக்கப்பட்டது. அக்கமிட்டி இன்னும் தன் வேலையைத் தொடங்கவே யில்லை.

23—12—56-ல் செங்கற்பட்டு வடஆற்காடு ஜில்லாக்களைச் சேர்ந்த மீனவர் கூட்டுறவு சம்மேளனம் (Fishermen's Co-operative Society Federation) ஆரம்ப விழா வேலூர் அஸிஸ்டெண்டு டைரக்டர் கனம். S.T. சாரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 15 சொசைட்டிகள் கலந்துகொண்டன. தீர்மானித்தபடி ரூ. 101 ஒவ்வொரு சொசைட்டியும் பங்குத் தொகை கட்டியிருந்தும் இன்னும் அது பதிவுசெய்யப்படவும் செயல்படவும் இல்லை.

சங்கத்தின் சார்பாக 2—10—56-ல் சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூக்காச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதன்கீழ் 12 கிளைச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

செங்கற்பட்டு மீனவர் கூட்டுறவு சங்கம் அடிஷனல் டைரக்டர் அருள்தாஸ் I. A. S., அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 7—10—56-ல் தென்ஆற்காடு ஜில்லா இளைஞர் மாநாடு திரு. R. P. சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 11—11—56-ல் சைதாப்பேட்டை பருவதராஜகுல சங்கம் திரு. V. M. நடேசநாட்டார் அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது 2—11—56-ல் சங்கராபுரம் பருவதராஜகுல சங்கமும், 23—12—56-ல் காஞ்சிபுரம் மீனவர் கூட்டுறவு சங்கத்தின் 4-வது ஆண்டு விழாவும், 17—2—57-ல் ஆலந்தூர் மீனவர் வாலிபர் சங்கமும், 29—3—57-ல் திருநாவலூர் மீனவர் கூட்டுறவு சங்கம் திரு. ஞானம் அவர்கள் தலைமையிலும் சிறப்பாக நடைபெற்றன.

30—3—57 காலை 10 மணிக்குக் காட்டுமன்னார்குடி பருவத ராஜகுல இலவச ஊண் இல்லத்தின் முன்னாள் மாணவர் துவக்க விழா புதுவை மீன்—மின்சார துறை அமைச்சர் கனம். J. சந்திர சேகரனார் அவர்கள் தலைமையிலும் மாலை 3 மணிக்கு ஊண் விடுதியின் 11-வது ஆண்டு விழாவும் நடைபெற்றன.

சேலம் ஜில்லா பூலாம்பட்டியில் 20—1—57-ல் முதல் அமைச்சர் கனம். K. காமராஜ் நாடார் அவர்களுக்கும் 14—2—57 இடப்பாடியில் நிதி அமைச்சர் கனம். C. சுப்பிரமணியம் அவர்களுக்கும் சென்னை ராஜ்ய சங்கத்தின் சார்பில் உபதலைவர் S.K.G. நாராயண பக்தர் அவர்களால் விண்ணப்பங்கள் செய்துகொள்ளப்பட்டன.

நிற்க, அரசியலாரின் 1-10-56 உத்தரவும், 2-2-57 உத்தரவும் கிடைத்தபின்னர் முதல் அமைச்சர் அவர்களையும் விவசாய மீன் அமைச்சர் அவர்களையும் தற்போது அமைச்சராக உள்ள ஸ்ரீமதி கனம் லூர்து சைமன் அவர்களையும் பல முறைகள் பேட்டிகண்டும், நேரில் விண்ணப்பங்கள் கொடுத்தும், எந்தவிதபயனும் இல்லாமற் போய்விட்டது மிகவும் வருந்தத்தக்கது. ஏழைகள் செய்யும் தொழிலை இப்படி நாசப்படுத்தி பட்டினிபோட்டிருப்பது அரசாங்கத்தினர்களுக்கு நன்கு தெரியவேண்டும் என்பதற்காகவே இம் மாநாடு இன்று கூட்டப்பெற்றுள்ளது.

பெரியோர்களே! இந்த ஆண்டில் எல்லாக் காரியங்களும் சீரும் சிறப்புமாய் நடக்க உதவியாக இருந்து ஊக்கமளித்த வெளியூர் உள்ளூர் பெரியவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றனம். சிறப்பாக சென்ற சில மாதங்களாக அரசாங்கத்தினர் அனுப்பிய உத்தரவு சம்பந்தமாக அரும்பாடுபட்டு இரவு பகலெனப்பாராது, அல்லலுற்று மனம் கசிந்த தலைவர் உயர்திரு. V. M. நடேச நாட்டார் அவர்களுக்கு இச்சங்கம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

உங்கள் யாவருக்கும் எங்கள் மனமார்ந்த வணக்கம்.

இங்ஙனம் செயலாளர்கள்:

K. நடேச நாட்டார். A. கோவிந்தசாமி. P. A. நடேசன்,

அறிவிப்பு

சென்னை ராஜ்ய மீன்வள ஆலோசனை போர்டின் உள்நாட்டு உறுப்பினராக சென்னை திரு. V. M. நடேச நாட்டாரும், தஞ்சை A. மாரியப்ப மணியக்காரரும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பெண்ணின் இலட்சணம்

தமிழ்ப்புலவர் சிவ. முருகசிவம்

இன்ப வாழ்க்கைக்குப் பெண்ணின் இலட்சணத்தைப் பார்ப்பதற்குமுன் முதல்முதலில் குலத்தையும் குடிப்பிறப்பையும் பார்க்க வேண்டும். நல்ல கோத்திரமொன்றினில் உதித்தவளாயும், மிருது

வான இனிமையான மொழியையுடையவளாயும், தன் கணவனுக்கு இளையவளாயும், கோப குணமில்லாதவளாயும், விரும்பிய மூர்க்கரைக் கடிந்தோட்டும் குளிர்ந்த சந்திர பிம்பத்தைப்போல முகமுடையவளாயும், பல சகோதர சகோதரிகளோடு பிறந்தவளாயும், நோய் பழியில்லாத கால் வழியில் வந்தவளாயும் இருக்க வேண்டும்.

மேலும் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் குணங்களை யுடையவளாயும், மாமி மாமனுக்கு இதம் செய்பவளாயும், விருந்தோம்பப் பிரியமுள்ளவளாயும், ஆணைக்கடங்கி பிறர் இல்வழி செல்லாதவளாயும், புருஷன் வருமானத்திற்குக் குறைந்த செலவு செய்யக்கூடியவளாயும் உள்ள கன்னிகையை மணம் கொள்ளுவதோடு சிறிது ரூபத்தையும் ஆராயவேண்டி இருக்கிறது. சாமுத்திரிகா லட்சணப்படி எல்லா சுபலட்சணங்களும் பொருந்தி நிற்றல் கூடாமையென்றும், அவரவர்கள் மரபினில் கிடைப்பது அரிது என்றும் விடுத்து சிறப்பாக விசேஷ லட்சணம் இருப்பின் கொள்ளுதல் நலம். ஆனால் சில பொருத்தமற்ற லட்சணமுடையவளைத் தள்ளிவிடுவது மிக நல்லது.

அதில் மலையிலக்காகக் குறிப்பிடும் சிலவற்றைக் கட்டாயம் தள்ளவேண்டும். அதாவது நீண்ட கழுத்தையும், நெறித்த முகம், பறட்டை மயிர், குறுங்கை, உட்குழிந்த கண்கள், புருவங்கள் ஒன்றோடொன்று கூடியிருப்பது, இருசுழி, மட்டைக்காது, குரங்கு போன்ற முகம், கழுதைபோன்ற வெடித்த குரல், இத்தகைய லட்சணத்தில் யாதானும் ஒன்று சேர்ந்திருந்தாலும் அவளைக்கூடி வாழில் நீங்காத தரித்திரமும், தீராத வியாதியும் உண்டாகும். ஆகவே, இதை முற்றிலும் நீக்குதல் நலம். இத்தகையோரை என்ன செய்வதென்று வாசகர்களுக்கு ஐயம் தோன்றலாம். அவரவர்களுக்குத் தகுந்த லட்சணம் உடையவர்களை ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணுமாகப் பொருத்திவைத்தால் கெடுதி நேரிடாது. இரண்டு எதிர்மறை ஒரு உடன்பாடாகும். சுபலட்சணம் உள்ள பிள்ளைக்கு மேற்குறிப்பிட்ட பெண் கூடாதே தவிர அதற்குந் தகுந்தபடி பிள்ளையைப் பார்த்தால் கெடுதிநேரிடாது. ஆகையால் தான் பெண்ணைப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்னும் பழக்கம் வந்திருக்கிறது.

"பெண்ணுதவுங் காலை பிதாவிரும்பும் வித்தையே
எண்ணில் தனம்விரும்பும் ஈன்றதாய்—நண்ணிடை
கூறியநற் சுற்றம்குலம் விரும்பும் காந்தனது
பேரழகு தான் விரும்பும் பெண்"

பெண்ணுக்கு நேர்பவன் கல்வியில் வல்லவனா என்று தந்தை நோக்குதலும், செல்வமுள்ளவனா என்று தாய் விரும்புதலும், நல்ல குலமும் குடிப்பிறப்புமுடையவனா என்று சுற்றத்தார் விரும்புதலும், கணவனது பேரழகைப் பெண் விரும்புதலும் பொதுவான ஆராய்ச்சியாகும். சிறப்பாகச் சாந்தவிர்த்தியான குணமும்,

ஆசாரமும், அழகும், பூரண ஆயுளும், திறமையும், கல்வியின் தேர்ச்சியும், ஆளும் ஆற்றலும், செல்வமும் ஆகிய எண்வகை குண முடைய பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுப்பது உத்தமமென்றும், பிறப்பு இறப்புக்கஞ்சி மோட்சத்தையடைய வேண்டி துரிதமாகத் துறவறத்தைக் கைப்பற்றச் சிந்தையுடையவனுக்கும், சுத்தத் தரித்திரனுக்கும், மூர்க்கனுக்கும், தூர தேசத்திலுள்ளவனுக்கும், மனதில் திடகாத்திரமான ஆற்றலோடு உயிரைத் துரும்பாகப் பாவித்து அதற்குரிய தொழிலிலிருப்பவனுக்கும், பெண்ணுக்கு மூன்று பங்குக்குமேல் அதிகமான வயதுடையவனுக்கும் பெண் ணைக் கொடுக்கக்கூடாதென்றும் சாஸ்திரம் கூறுகிறது.

ஆனால், தற்காலமோ என்றால் பணத்தையே பெரிதும் பாராட்டி சிலர் பெண்ணின் நலனைக் கருதாது, தங்கள் சௌ கரியத்தைக்கோரி, பெண்களைச் சதா துக்கத்திற்காளாக்கி விடுகிறார் கள். பெண்களைப் படிக்க வைத்ததின் பயனாக நான்கு எழுத்துப் பேர்கூட்டிச் சரியாய்ப் படிக்கத் தெரியாமற்போனாலும் கர்வித்துக் கோண வகிடு எடுத்து, ரிப்பன், லேஸ், பவுடர், சோப்பு, சென்ட் முதலியவைகளை நன்குகற்றுக்கொண்டு, பெற்ற குடும்பத்தாரையும் புகுந்த குடும்பத்தாரையும் வருத்தி அவைகளைப் பெறுகின்றார்கள். மேலும் கற்கும் கல்வியால் அறிவு விளங்காமையால் விவாக காலத்தில் தாய் தந்தையர்கள் சொல்லுக்கு மாறுபாடாய் அவர வர்கள் மரபினில் கிடைக்கக்கூடாத வரனை விரும்புதலும், வரும் மாப்பிள்ளைகளுக்குக் குறைகூறுதலும், பின்னர் ஊழினளவாய் நேர்ந்தபின் இதைப் பார்க்கிலும் பாழுங்கிணற்றில் தள்ளி இருக்க லாமென வருந்தும்போது இருமுதுகுரவர்களுக்கு நிகழும் துக்கத் தைச் சொல்லமுடியாது.

அளவின்றி பாடசாலைக்கு அனுப்புவதால் வீட்டு வேலைகளை யும், அட்டில் வேலைகளையும் அருகிலிருந்து தாயின் குணங்களையும் கல்லாது தங்கள் வேறு கொள்கையுடைய உபாத்தியாயர்களின் நாகரீகத்தைக் கற்றுள்ள பெண்களை மணம் புரிவிக்கும்போது சம் பந்திகளிடத்திலே அல்லது மாப்பிள்ளை யிடத்திலே எங்கள் பெண்ணுக்குக் காலையில் காபி தேவையென்றும், நீர் தவலை முதலிய பளுவுகளைத் தூக்க முடியாதென்றும் இவ்விடம் ஒரு வேலையும் செய்யாததுபோல் அவ்விடமும் வைத்திருக்க வேண்டுமென்றும் பலவாராய் விண்ணப்பித்துக் கொள்கிறார்கள். அதன்படி நிகழா விடில் பெண்ணுக்கும் தாய் தந்தையர்களுக்கும் புருஷர்களுக்கும் சதா துக்கத்தோடு வாழ்நாள் செல்லுகின்றது. தேக உழைப்பாகப் பணிவிடை செய்யாமையால் பிரசவ காலத்தில் அதிக கஷ்ட மிருக்கிறது என்பதை உலகம் அறிந்த விஷயமேயாகும். இன்னும் பெண்ணுக்குப் பல லட்சணங்கள் சொல்லக்கூடாததாயும் வெளிப் படையாக எழுதக்கூடாததாயும் இருக்கிறது. ஆகவே, இது அதிக மென்று நிறுத்தி பெண்ணைப் பார்த்துக்கொள்ளுதல் என்பதனை ஆராய்வோம்.

வைத்தியம்

கரசனாங் கண்ணி

தமிழ்ப்புலவர், சிவ. முருகசிவம் அவர்கள்.

[75, நைனியப்பன் தெரு, சென்னை - 1.]

இந்தக் கீரைக்கு நாட்டுக்குத் தகுந்தவாறு கரசனாங் கண்ணி, கரிசாலை, கையார்ந்தகீரை, கரிப்பான் என்று சொல்லுவதும் ஒரே பொருள்தான். இந்தக் கரிசாலையை முன்னோர்களும் கையாண்டார்கள். பின்வந்த இராமலிங்க சுவாமிகளும் இதனுடைய குணத்தை அருட்பாவில் விளக்கமாகக்கூறி இருப்பது போற்றத்தக்கதாகும். இந்தக் கரிசாலையில் வெள்ளைப்பூ பூப்பது. மஞ்சள்பூ பூப்பது, கருப்புப்பூ என்று கருநீல நிறமாகப் பூ பூப்பது உண்டு. இந்த மூன்றிற்கும் சிறந்த குணங்களுண்டு. கருப்புப் பூவும் மஞ்சள் பூவும் பூக்கும் கரிசாலை கிடைப்பது அரிது. வெள்ளைப்பூ பூக்கும் கரிசாலை நன்றாகக்கிடைக்கும். ஆனால், உப்புநீர் வாடை அடிக்காத இடத்திலும் சதுப்பு நிலமாகிய வயற்காட்டிலில்லாத மேட்டு இடத்திலும் உள்ள கரசனாங்கண்ணி அதிக குணத்தைச் செய்கின்றது என்பது உண்மை.

வயல் வரப்போரத்தில் நீண்டு வளர்ந்திருக்கும் கரிப்பானுக்குச் சத்து சிறிது குறைந்திருக்கிறது. பொற்றலைக்கையான் அதாவது மஞ்சள் பூ பூக்கும் கரிசாலை மிகவும் நல்லது. அது கிடைப்பதில்லை. அதுபோன்ற ஒரு பூண்டைப் பொற்றலைக்கையான் என்று நம்பி சில வைத்தியருங்கூட மோசம் போய்விடுகிறார்கள்.

சென்னை, திருச்சி, மதுரை முதலிய இடங்களில் கட்டுக்கட்டாக மஞ்சள் கரசனாங்கண்ணி என்று கடையில் விற்பதை வாங்கி பலன் இழந்துவிடுகிறார்கள். மூலிகையும் சரக்கையும் பார்த்தறியத் தெரியாமல் வைத்தியத்தின்மீது குறைகூறுகிறார்கள். பரீட்சையிற் தேறிய தமிழ் வைத்தியர்கள் இதைக் கவனிக்குமாறு வேண்டுகிறேன். கரிசாலையை எல்லாரும் நன்றாக அறிவார்கள். வெள்ளைப் பூ கரசனாங்கண்ணி எப்படி இருக்குமென்றால் இலையின்மீது சிறு சிறு சொரசொரப்பும் இலையின் முனை கூராகவும் இலை இடுக்கில் கொடி அருகில் பூ பூக்கும். அப்படியே மஞ்சள் பூ பூக்கும் செடி அகப்பட்டால் மிகநல்லது. இப்பொழுது கிடைக்கும் கரிசாலை

இலை இடுக்கில் ஒரு சாண் கொடிவிட்டு மஞ்சள் பூ பூப்பது கரசனாங்கண்ணியல்ல.

இலை இடுக்கிலும் மஞ்சள் பூ பூக்கும் செடி அருமையாகக் கிடைக்கிறது, அதில் கொடியாகவும். குத்துச் செடியாகவும், அதனைப்போன்றே பெருஞ் செடியாகவும் இருக்கிறது. ஆனால் வெள்ளைப் பூவைப்போல மஞ்சள் பூ செடிதான் சரியானது. முதலில் வஸ்து சரியாகத் தெரிந்தால்தானே அதன் குணத்தைப் பெறமுடியும். கடலைப் பார்க்க விரும்பியவன் திக்குத் தெரியாமல் வடக்குநோக்கி சென்றுகொண்டிருந்தால் சமுத்திரம் கிடைக்குமா? பெரியவர்கள் கூறியதை நன்கு அறியாமல் குணமில்லை என்று குறைகூறுகிறார்கள்.

கரிசாலை உண்டால் பொதுவாகக் குரல் கம்மல், காமாலை, சோகை, பாண்டு, குஷ்டம் முதலிய பல நோய்களும் நீங்கும். தேக ஒளியும் புத்தித் தெளிவுமுண்டாகும். திருமூலர் கருக்கடை என்னும் நூலில் நரைகளும் திரைகளும் நீங்கிச் சிறுபிள்ளைபோல யௌவனத்தையும் உண்டுபண்ணுமென்றார். இதன் பெருமையை என்னவென்று பேசுவது. பேசுவதில் என்ன பலன்? சாப்பிட்டுக் குணமடையவேண்டும்.

கரிசாலையை லேகியமாகவும், கிருதமாகவும், கூட்டாகவும், பொரியலாகவும் செய்து சாப்பிடலாம். இதற்கு ஆண் பெண் என்ற வேற்றுமையும் இல்லை. பெரியவர் சிறியவர் என்ற வயது வேற்றுமையும் இல்லை. லேகியமாகவும், கிருதமாகவும் செய்யும் முறையைக் கேட்டுத்தெரிந்து கொள்ளவேண்டியது. கரிசாலையை நிழலிலே உலர்த்திச் சூரணம் செய்துகொண்டு சமமாகச் சர்க்கரை கலந்து சாப்பிடலாம். அப்படிக்கின்றி அந்தச் சூரணத்தோடு சர்க்கரையும் தேனும் கலந்து லேகியம்போல செய்துகொண்டு காலை மாலை கழற்சிக்காயளவு சாப்பிடலாம்.

கரசனாங்கண்ணிக் கீரையை ஆய்ந்தெடுத்துப் பருப்பிட்டுத் தேங்காயும் சேர்த்துக் கூட்டாகவும் பொரியலாகவும்செய்து சாப்பிடலாம். அதில் இரும்புச் சத்து இருக்கிறது. தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதாவது "இளைத்தவன் இரும்பைத் தின்னு" என்பது. இரும்பை நேராகச் சாப்பிட முடியாதாகையால் நல்ல வைத்தியரைக்கொண்டு அயச்செந்தூரம், அயத்திராவகம், அய மெழுகுசெய்து சாப்பிடவேண்டும். அது முடியாதவர்கள் தினப் படி இந்தக்கீரையைச் சாப்பிட்டுவந்தால் சோகை, பித்தப்பாண்டு முதலியவை நீங்கி ரத்தம் சுத்தமாகி தீராத வியாதிகளும் போய் விடும், சிறு குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். மேலும் இந்தச் சாற்றில் கண்ணுக்கு மை செய்வதும் உண்டு. அந்த மையினால் கண்பார்வை குறைவும் கண் வியாதிகளும் நீங்கும். கரிசாலையைப் பற்றி இதுவரைக்கும் அநுபவத்தில் கொண்டுவந்தால் போது மென்று இத்துடன் நிறுத்துகிறேன்.

——(o)——

"ஊழ் வினை"

இடைசை—திரு. சின்னு.

பேரன்புமிக்க தோழமைச் செல்வ!

நலம். வேலூர் சிறையிலிருந்து இக்கடிதத்தை உனக்கு வரைகின்றேன். தன்னுடைய துக்கங்களைப் பிறரிடம் சொல்லி அழுவதால்-மன்னிக்கவும்-ஆறுதல் அடையமுடியும் என்னும் ஆவலோடு எழுதுகின்றேன்

அன்புத் தோழரே!

நான் இப்புவியில் பிறந்தது முதல் சிறைவாசமே அனுபவிக்கின்றேன். என்னுடைய மனதறிந்து தீங்காக எதையுமே செய்ததில்லை. குற்றமும் புரியவில்லை. ஆனால் சிறையில் வாடுகின்றேன். இதற்காகப் பிறரைக் குறைசொல்லவில்லை. பிறந்த பொன்னகத்தை நோகவில்லை. ஏன்? தோழா! அதுதான் என் ஊழ்வினை. என்னை ஊழ்வினை உறுத்தும்போழ்து பிறரை நொந்து பயனென்ன?

சிறைதான் என் செல்வச் சிங்காரவீடு. சிறைக்கோட்டக் கம்பிகள்தான் என் தோழர்கள். முழுமதிதான் என் மனைவி—ஆமாம் தோழா—வானத்துச் சந்திரன்தான் என் இல்லக்கிழத்தி. அழகு முகம்காட்டி அழைத்திடுவாள். 'களுக்'கென சிரித்து முன் வருவாள்; பின்வருவாள்; அனந்த நாள் வரமாட்டாள்; இப்படியே என் வாழ்வின் சோககீதம்—இல்லை, இல்லை—சுந்தரகீதம் நடைபெறுகிறது.

தோழா! கற்றுணர்ந்த பெரியோர்கள் கூறுகிறார்கள்-நல்லது செய், நலம்பெறுவாய், எண்ணம்போல் வாழ். நாம் இப்பூவுலகில் நல்ல செய்கையும், ஈகையும் களங்கமில்லா மனத்தோடும் வாழ்ந்தால், நம்மை நிழல்போல் தொடரும் ஊழ்வினையை முறித்திடலாம்—என்று நான் பிறந்தது முதல் சிறையிலேயே வாடுகின்றேனே! எங்ஙனம் நற்செய்கை புரிவது?

என் கதையைக்கேள்! நான் என் தாய்க்கு முதல் மகனாக அவதரித்தேன் ஓரே பிரசவத்தில்—என்னுடன்கூடவே ஒரு தம்பியும் பிறந்தான். ஆனால் ஏதோ காரணத்தால் என்னைக் கூடையில் மூடிவைத்தார்களாம் எனது தம்பி இறந்துவிட்டான். நானும் இறந்திருக்கக்கூடாதா? என்று எனது உள்ளம் இன்று நினைக்கிறது. ஆனால், அதே சமயம் என் எண்ணமும் மாறுகிறது. என் ஊழ்வினை—நான் முற்பிறவியில் செய்த கொடிய பாபங்கள்—தொடர இருக்கும்போது எங்ஙனம் முடியும்என நினைத்து சாந்தி பெறுகின்றேன்.

என்னைப் பெற்றெடுத்த 4 மாதங்களில் என் தாய் இவ்வுலகை விட்டு நீங்கி, இறைவன் இன்னருள் பெற்றுவிட்டாள். அதுவும் நல்லதாகத்தான் போய்விட்டது. சிரிக்காதே செந்தமிழ்ச் செல்வ!

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என வள்ளுவப்பெருந்தகை கூறிய மொழிப்படி நான் இன்று இருக்கும் நிலையில் எனது அருமைத்தாய் இருந்திருந்தால்—அக மகிழ்வாளா ? ஐயகோ !

அடுத்துப்பார் தோழா ! வேலனை வேங்கமரமாக்கிவைத்த, காகமேறும் தம்பிரானாகிய சனிபகவான் என்னை விட்டானில்லை தொடர்கிறான். எனது தகப்பனார் மறு மணம் புரிந்திட்டார். அன்புச் சிற்றன்னைக்கு அடியோடு என்னைப் பிடிக்கவில்லை. என்னுடைய இளமை கொழிப்புமிக்க தொல்லைகள் பொறுக்கமுடிய வில்லை என என்னை அனாதை ஆசிரமத்தில் சேர்த்தார்கள், அந்தோ ! தோழா ! ! என்னைப் பெற்றெடுத்த பேரின்பத்தாய் இம்மாதிரி செய்வாளா ?

பெண்களின் உளநிலை வேறுபடும்போது ஆண்கள் வெறி பிடித்த ராட்சச மிருகங்களாகி விடுகின்றனர். இவ்வார்த்தை தந்தையை நோக்கிச் சாடவில்லை உலக நிலையை விளக்கினேன். எனது கஷ்டகாலம் அம்மாதிரி சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அனாதை ஆசிரமத்திலாவது என்னை ஒழுங்காக இருக்கச் செய்யவில்லையே அந்தப் பாழும் விதி ! என்னைக் குற்றமுள்ள வனாக வாழச்செய்து வதைக்கிறதே.

யாரோ செய்த சதியில் நான் அகப்பட்டேன். நான் சாப்பாட்டிலே விஷம்கலந்த, எல்லா இளம் சிறார்களையும் சாவடிக்க வழிசெய்தேனும் எனது உள்ளம் நோகிறது. விம்மல்களுக்கு இடையே இதை எழுதுகின்றேன். அந்தக் கொலைபாதகச் செய லிலே நான் இறங்கவில்லை. விஷத்தைப்பற்றியே அறிந்திலன். சூழ்நிலையும் சந்தர்ப்பமும்தான் மனிதனை வாழவொட்டாமல் தடுக்கிறது. எலி பாஷாணத்தை எனக்கு விற்றதாக சாட்சி. என் இருப்பிடத்திலேயும் பாஷாணம் கண்டெடுப்பு. யாரோ ? எதற்கோ செய்த சதி என்மீது சுமத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி பட்டினத்தடிகளைக் கள்வன்எனக் கழுவில்நிறுத்திய காட்சியாகத் தான் இருக்கிறது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைதனில் வாடுகிறேன். என் வாழ்வு இவ்வளவு பெரிய சோகச்சித்திரமாக மாறிவிட்டது.

எனது எழிற்பருவம் குறைகிறது, முதுமை தட்டுகிறது, என் வாழ்நாளெல்லாம் இப்படிக் கழித்துவிட்டேன். இன்னும் கொஞ்சகாலம் எப்படியோ இந்தச் சிறையில் கழித்துவிடப்போகி றேன் என்னுடைய குழந்தைப் பருவம் வீணாகிவிட்டது இளமைப் பருவம் ஒடிவிட்டது முதுமைப் பருவம் என்னை முறைக்கிறது— இன்னும் கொஞ்சகாலம் தான் என்று.

உலக மகாகவி ஷேக்ஸ்பியர் நமது பருவங்களை எவ்வளவு அதிகமாகப் படம்பிடித்துக் காண்பிக்கிறார் :

" மண்ணிற் பிறந்தொளிர் மாந்தரின் நிலையெலாம்
எண்ணிப் பார்த்திடின் ஏழாம், அவற்றுள்
பரிவுடன் தாய்தரும் பாலமு துண்டு
சிரிதரு முகத்துடன் செவியமு தூட்டி
மழலைச் சொல்லாள் மனமகிழ் விக்கும்
குழவிப் பருவமே கூறுமோர் நிலையாம்;
இணங்கா மனத்தனாய் ஈன்றூர் வருத்தவும்
பிணங்கிச் சிணுங்கிப் பின்ன ரிசைந்து
மெள்ளவே நகர்ந்து துள்ளித் திரும்பும்
பள்ளிக் கேகும் பருவமோ யிரண்டாம்;
மூன்றும் பருவமோ முகமது மினுக்கிச்
சான்ற மணிகலன் சாலவும் பூண்டதைக்
காதலி மகிழ்வுடன் கண்டு களித்தன
ளாதலி னெவற்றினும் அழகே சிறந்தென
மாதரார் மயங்கும் மாண்டகு வனப்புடைக்
காதலன் பொலிவுடன் காணுறும் நிலையாம்;
நான்காம் பருவமோ நால்வகைப் படையுடன்
மான்போற் றுள்ளி மறலிபோ லெதிர்த்துப்
பற்றித் திருகிப் பகைவரைக் கொன்று
வெற்றியை நாட்டும் வீரனது நிலையாம்;
ஐந்தாம் பருவமாம் அரியநன் னிலையிலோ
புந்திகால் நோக்கும் புகழுறு மொழியும்
ஓங்கிய மீசையும் உருண்ட தொந்தியும்
பாங்குடன் விளங்கப் பரிவுட னெவர்க்கும்
நீதியே புகட்டும் நீதிமான் நிலையாம்;
அதன்பின் தோன்றும் ஆறும் நிலையிலோ
சதமென விருந்த ஜகந்தனில் வெறுப்புற்று
ஆத்தும ஞான ஆசைப் பெருக்கால்
சாத்திரம் பலவும் சாலவே யுணர்ந்து
கையினில் தடியும் காலினில் குறடும்
மெய்யினில் நீறும் மிகுந்து விளங்க
அரிபெரி யவனோ அரன்பெரி யவனோ?
எவனே பெரியவன்? எவனே சிறியவன்?
என்றே பலகா லெடுத்துப் பேசிக்
காணு ரெதனையுங் கண்டார் போல
வாணாள் கழிக்கும் வைதிகர் நிலையாம்;
இவையெலாம் கடந்த ஏழாம் நிலையிலோ
அவயவம் யாவும் அயர்வடைந் தமையாற்
சொல்லும் பிறழ்ந்து சுவையுங் குறைந்து
பல்லும் உதிர்ந்து பார்வையும் மறைவுற்று
அந்தியிற் குழந்தைக ளாயின ரெனவே,
விந்தை விந்தையாய் விரும்பியும் மறந்துங்
கணந்தோறுங் கணந்தோறும் குணம் பிறிதாகியும்

உடைநடை யாவையும் ஒருங்கே மாறியுங்
கடை நாளதனைக் கழிப்பது தானே.''

தோழா! உனக்கு எழுதும் முதற்கடிதமும், கடைக்கடிதமும் இதுதான். என்னோடு சிறையிலிருந்து வெளியேறிய உனக்கு நாம் வாழவேண்டிய நிலையையும், நான் வாழ்கின்ற நிலையையும் விளக்கினேன். கடைசியாக இன்னும் சிலகூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

''நகையெறி'' என நமது புலவர் பெருமக்கள் கூறிய புன் சிரிப்பைப் பழக்கிக்கொள். கோபம் மாந்தருக்கு வருவது இயற்கை அந்தக் கோபத்தைப் புன் சிரிப்பிலே தவழவிடு.

கடைசியாக உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன். என்னுடைய நிலை இப்புவியில் யாருக்கும் ஏற்படவேண்டாம்.

என்னை ஊழ்வினை துன்புறுத்துவதுபோல் பிறமக்களையும் துன்புறுத்தினால் — எனதப்பன், ஈசன், நேசன், இனிதருள்புரிவோன், எனையாளும் முருகேசப்பெருமானிடம் அடைக்கலம் புகச்செய்.

அதிகாலையில் துயிலெழுந்து மனம், வாக்கு, காயம், சுத்தப் படுத்தி நிமலனருள் துதிபாடி நிறைவோடு மலர்தொடுத்து இறைஞ்சி நிற்கும் அந்தப் பாக்கியமே, பெரும் பாக்கியம்.

''நாதவிந்துக லாதி நமோ, நம!
வேத மந்த்ர சொரூபா நமோ, நம!!

இங்ஙனம்,
இறைவன் பாதக்கமலம் தொட இறைஞ்சும்
பரந்தாமன்.

சோகத்தின் எல்லையிலே?

(திரு. தி. வேங்கடத்தான், சின்னச்சீரகப்பாடி)

காட்சி 1. இடம்:—சேகரின் வீடு. ஊர்: சின்னச்சீரகப்பாடி.

சேகரின் தந்தை:—(படுத்த படுக்கையாய் இரும்பிக்கொண்டே) சேகர்! என் உயிர் போய்விடும்போலிருக்கிறதே? அய்யோ உடம்பு வலிக்கிறதே? மார்பு அடைபடுகிறதே? மூச்சு தடைபடுகிறதே? காய்ச்சல் என்னை எடைபோடுகிறது. இறப்பு எனக்குக் கடைக்கண் காட்டுகிறது! ஐயகோ? சேகர்!

சேகர்:—அப்பா! தெய்வமே! என்னை ஏன் பிறப்பித்தாய், அதுவும் இந்த ஏழைக்குடியில். ஊரார் உதைத்துத்தள்ளப்படும் பருவதராஜகுலப் பரம்பரையில் ஏன் பிறப்பித்தாய்! துன்பக் கடலில் துடிக்கும் என்காலம் உன் கண்ணில் படவில்லையா? தெய்வமே! உன்படைப்பில் அடுப்பாரும், கொடுப்பாரும் ஏன்? ஏராளமாய், தாராளமாய் உதவிசெய்த உன்கைகள் கதிரவன்

வரவை எதிர்நோக்கும் கமலங்களாகிவிட்டனவே? கலங்குகிறேன் கதியற்று. உண்ண உணவின்றி என்ன எலும்புகளாய்த் தெரியும் என் உடல் ஆடையின்றி, வாடையில் மெலிந்து அடியற்ற மரம்போல் படிமேல் விழுந்தால் உருண்டுகொண்டே போவது தானு? அகப்பற்றுகளையும், புறப்பற்றுக்களையும் அறவே அழித்த ஆண்டவனே! என் தந்தை மாண்டுபோகும் நிலையில் இருக்கிருரே! காப்பாற்று நீ நினைத்தால் இவ்வுலகை விண்ணேர் வியக்க மண்ணேர் மகிழ, மயில் ஆட, குயில்கூவ சோலையாக்கலாம்! பாலையை அழிக்கலாம்! தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரே! நோயும் நொடியுமாய் பாயும் படுக்கையுமாய்க் கிடக்கும் என் தந்தையை எப்படிக் காப்பாற்றுவேன்? என் தந்தை படும்பாட்டையும், என் குடும்பம் கெடும்கேட்டையும் இன்னுமா பார்த்துக் கொண்டிருக்கிருய்? வீட்டின் குற்றங்களை நீக்கிக் குணங்களைக்கொடு.

தந்தை :—தரை மட்டமாக்கி உன்னைக் கரைகாணுமல் தவிக்கும்படிசெய்த என்னை மன்னித்துவிடடா கண்ணே! காரியமாகிற வரைக்கும் காலைப்பிடி ; காரியமானவுடன் கழுத்தைப்பிடி என்பதுபோல் உன் உற்ருர், உறவினர்கள் உன்னை உதைத்துத் தள்ளிவிட்டார்களே?

சேகர் :—உற்ருர் உறவினர்களா அவர்கள்? இல்லை. உடன் பிறந்தேகொல்லும் வியாதி அவர்கள். அவர்களை நம்பி வாழ்ந்தால் நட்டாற்றில் காலைவிட்டவராவோம்,

* * *

ஆஹா! நான் படித்த புத்தகங்கள்! பெரியோரின் பொன்னேவியங்கள்! உங்களை அளவின்றி சிநேகித்தேன் ; நஞ்சாயிற்று. பழக பழகப் பாலும் புளிக்கும் என்பதற்கு நீங்கள் மட்டும் என்ன விதிவிலக்கா? என்னைவிட்டு ஓடிப்போ! (தூக்கி எறிதல்) ஒன்றுக்கும் உதவாத நற்சாட்சிப் பத்திரங்கள்! எங்கே பயன்பட்டன அவ்வளவும் வெளி வேஷம். துளி விஷத்துக்குச் சமம். அதைவிட உங்களால் என்ன செய்யமுடியும்? நெருப்புக்கு இரையாகிக் கருகிப்போங்கள்,

அப்பா! இதோ உங்களுக்கு மருந்து வாங்கிக்கொண்டு வருகிறேன். முனிசிபல் இலவச வைத்திய சாலைக்குப் போகிறேன்! (ஓடுகிருன்).

காட்சி 2. இடம் :- முனிசிபல் வைத்தியசாலை.

சேகர் :—ஸார்! ஸார்!! டாக்டர் ஸார்! உடனே வாங்க ஸார்!

டாக்டர் :—சே! நான்சென்ஸ்! என்ன 'ஒர்க்' பண்ணுறேண்ணு தெரியாமே வந்து 'ட்ரபுள்' தர்யமேன் என்ன?

சேகர் :—ஸார் எங்கப்பாவுக்கு ஐந்து நாளா காய்ச்சல் ஸார்.

டாக் :—ஐந்து நாளா? சரி ஐம்பது ரூபாய் கொண்டுவா.

சேகர் :—ஆ! ஐம்பது ரூபாய்! ஐந்து வருடம் சம்பாதித்தாலும் ஐம்பது ரூபாயை நாங்கள் சேர்க்கமுடியாதே! ஐம்பது ரூபாய்! எங்கே போவேன்? என்று சொல்லிக்கொண்டே ஓடுகிருன்.

காட்சி 3. இடம்: ரோடு.

சேகர் :—ஹூம்! இலவச வைத்திய சாலையாம்! வெறும் கையாளருக்கு எங்கேயிருக்கிறது வைத்தியசாலை. வைத்தியசாலையா அது? இல்லை. ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள் அல்லவா அவைகள்? ஐம்பது ரூபாய் வேண்டுமாம். ஐம்பது ரூபாய். (சிரித்தல்).

ஆஹா! இதென்ன மின்னுகிறது. (குனிந்து எடுத்தல்).

ஆ! வைரமோதிரம் இதுபோதும் என் தந்தையைக் காப்பாற்ற! ஐம்பது ரூபாய் என்ன? ஐயாயிரம்பெறும் கிடைத்துவிட்டது பணம். (ஓடுதல்) நிற்கிறான்.

அதோ! யாரோ எதையோ தேடிக்கொண்டு வருகிறார்! ஆம் அவரே தான் இந்த மோதிரத்தின் சொந்தக்காரர். அவரிடம் இதைக் கொடுத்துவிடலாமா?

எதிரொலி 1. கோழையே! ஏழை நீ! அதற்காக அதைக் கொடுத்துவிடாதே! கையில் கனியிருக்கும்போது சுவைக்காமல் யாரும் இவ்வுலகில் இருக்கமாட்டார்கள்! குளிர்தருகிறதே என்று தளிர் நிலவைப் புகழாமல் இருக்கமுடியுமா என்ன? (ஓடுகிறான்).

எதி. 2. நில்! எங்கே ஓடப்பார்க்கிறாய்! உன் தந்தை சத்தியம் தவறா உத்தமன். அவர் மகனாகப் பிறந்த நீ, மாசுபடியா அவர் வாழ்வில் தூசை உண்டாக்கப் பார்க்கிறாய்? அந்தப் பொருள் உனக்கு வேண்டாம் கொடுத்துவிடு. அதற்கு ஆசைப்பட்டு மோசம்போகாதே. 'கிட்டாதாயின் வெட்டெனமற' என்னும் ஔவையாரின் அமுதவாக்கை நீ மறந்துவிட்டாயா? (திரும்புகிறான்).

எதி, 3. அட பேதையே! 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்னும் அதே ஔவையாரின் வாக்கைக் கேள்விப்பட்டதில்லையா நீ! மரணத்தின் எல்லைக்குப் போய்க்கொண்டிருக்கும் உன் தந்தையைக் காப்பாறு ஓடு! நிற்காதே! (ஓடுகிறான்).

எதி. 4, நில்! நான் என்ன செய்யச்சொன்னேன்? நீ என்ன செய்தாய்? 'சூதும் வாதும் வேதனைசெய்யும்' என்னும் ஔவையின் மற்றோர் அமுத வாக்கை நீ அறிந்ததில்லையா? உத்தமனை உன் தந்தையைப் பொய்யின்பால் பட்டவனுக்கு முயல்கிறாயா? அடுக்குமா இந்த அக்கிரமம். உன்னைத் தடுப்பார் யாருமில்லையா? கொடுத்துவிடு அந்த மோதிரத்தை.

சேகர் :—ஆம் உண்மை உணர்ந்தேன், இதோ அவரும் வந்துவிட்டார்! (ஆமாம்) ஐயா! இந்த மோதிரம் உங்களுடையதா?

(ஒரு இன்ஸ்பெக்டர் வருகிறார்).

ஸார்! இவன் என் மோதிரத்தைத் திருடிவிட்டான்.

இன்ஸ் :—ஆ! அப்படியா (கைது செய்கிறார்).

சேகர் :—அய்யோ! அப்பா! அ......ப்......பா!

—(o)—

புகலிடம்

"தென் குமரன்"

அத்தான்! ஊரார் உங்களைப் பழித்துப் பேசுகிறார்களே! வேலனா, அவனோர் பச்சோந்தி; 'நாட்டுக்குப் பணியாற்றுவேன்; நாட்டுக்குப் பணிசெய்து கிடப்பதே என்கடன்!' என்று மேடையேறி முழக்கிவிட்டு, ஊதாரியாய் ஊரில் உலவிவரும் எத்தன் என்றெல்லாம் ஏசுகிறார்களே! ஏன் அத்தான் இவையெல்லாம் உண்மைதானா?

வள்ளி! உலகத்திற்கு உழைத்த உத்தமர்களை இவ்வுலகம் முதலில் புகழ்ந்ததுகிடையாது வள்ளி! அன்று கிரேக்க மக்களைச் சிந்திக்கச்சொன்னான் சாக்ரடீஸ்; அவன் பெற்ற பரிசு நஞ்சு! அன்புவழி சிறந்தவழி என்றார் உத்தமர் காந்தி; அதற்கவர் பெற்ற பரிசு மூன்று துப்பாக்கிக் குண்டுகள்! இப்படியே உலகில் வாழ்ந்த பெரியார்களின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் தெரியும், முதலில் அவர்களுக்குக் கிடைத்த வரவேற்பு!

அத்தான் அப்போது நீங்கள்......?

கண்ணே! குருட்டுமதி படைத்தோர்கள்; இருட்டு வழியில் நடைபோடுவோர்; சித்து விளையாடுவேன் எனக்கூறி மக்களை ஏமாற்றும் எத்தர்கள் இவர்களுக்கு நானோர் அணுகுண்டு!

தெளிவு பெற்றுவிட்டேன் அத்தான்! நான் தெளிவு பெற்று விட்டேன்! அத்தான்......!

என்ன வள்ளி?

நம் திருமணம் எப்போது......

பயப்படாதே வள்ளீ! பயப்படாதே! திருக்குறள் எப்படிப் பொய்க்காதோ, அப்படித்தான் என் வாக்கும்! நீ எனக்குத்தான்; நான் உனக்குத்தான்! விரைவில் முடிந்துவிடும்!

எதுவத்தான்?

பொறுத்துப்பார் வள்ளீ! பொறுத்துப்பார்!

வேலன் கண் மறையும்வரை, அவன் போன திக்கையே பார்த்துநின்றாள் வள்ளி. தூரத்தே ஆந்தையொன்று அலறியது; அவள் உள்மனம் துணுக்குற்றது! 'இதென்ன அபசகுனம்?' என்று எண்ணிக்கொண்டே, வீடுநோக்கி நடைகட்டினாள் வள்ளி!

*   *   *

வேலன் ஒரு பகுத்தறிவுப் பிரசாரகன். சீமான்கள் அவனைக் கண்டு சீறினர்! பழமை வாதிகள் அவன் பேச்சைக்கேட்டு மனம் கொதித்தனர்! அறிஞர் குழாம் அகமகிழ்ந்தது! அரசியல் வாதிகளோ, 'அய்யகோ! வேலன் நமக்கு வேட்டாக அமைந்துவிட்டானே! அழிய மாட்டானா அவன்?' என்று அவன் அழிவை எதிர்பார்த்தார்கள்! வெளியுலகின் எதிர்ப்பைக் கண்டு கண்டு

இதயம் இரும்பாகிவிட்ட வேலனுக்கு வள்ளி ஒரு பசும்பூஞ்சோலை: குளிர் தென்றல்; வட்டநிலா; சுவை பலா!

அந்த ஊர் சப்–இன்ஸ்பெக்டருக்கு வள்ளிமீது ஒரு கண்; வேலன்மீதும் ஒரு கண்! பார்வை ஒன்றுதான்; 'பாவம்' தான் வேறு!

வள்ளி ஒரு கோலமயில்! அவளை நான் அடைந்தே தீருவேன்! வேலனை ஒழித்தாலன்றி, வள்ளியை நான் அடையமுடியாது! காலம் வரட்டும்; காத்திருப்பேன் அதுவரைக்கும்!

இப்படி எண்ணிக் காலத்தை எதிர்நோக்கியிருந்தார் சப் இன்ஸ்பெக்டர்!

நாட்டுக்கு உழைத்தவர்கள் யார்தான் அதிக நாள் வாழ்ந் திருக்கிறார்கள்? நல் இதயம் படைத்தோரை என்றுதான் இந்த ஊர் சும்மாவிட்டிருக்கிறது!

ஒரு நாள் வேலன் வீட்டில் 'போலீஸ்' சோதனை நடந்தது! அந்தச் சோதனையின்போது சாராயப்புட்டிகள் ஐந்து கண்டெடுக் கப்பட்டன! அதன் விளைவு . . . . பாவம், மூன்றுவாரக் கடுங்கா வல் தண்டனை கிடைத்தது வேலனுக்கு!

இத்தனைக்காலம் அறிஞர் குழாத்திடையே, நல்ல பெயர் எடுத்தவன் வேலன்! இன்று அவனுக்குக் கிடைத்த பெயர்— புகழ்—குடிகாரன்!

அய்யோ! என்னைக் குடிகாரன் என்று ஏசுவார்களே! நாட் டின் புகழ்காக்க, சிறைக்குச் செல்லவேண்டியவன்; இன்று சாராய வழக்கில் அகப்பட்டுச் சிறைவாழ்வு செய்கிறேனே என்று மனம் வெதும்பும் நல்லவர் உள்ளம்! இனி எந்த முகத்தோடு நாட்டில் உலவுவேன்; வள்ளி முகம் காண்பேன்! வள்ளி என்னை நம்புவாளா? என் உயிர் என்னை நம்புமா?

வேலன், தன் சிறை வாழ்வை இப்படி எண்ணிக் கழித்தான்!

அன்று அவனுக்கு விடுதலை! பகலிலே வள்ளியைக்காண வெட்கப்பட்டு இரவிலே சென்றான். வள்ளியைக் கண்டான்; உயிரோடு அல்ல; பிணமாக! பேசாத சிலையாக! அவனுடைய மார்பில் முகம் புதைத்து மகிழ்ந்த வள்ளி தூக்குக்கயிற்றிலே தொங்கினாள்! அவன் நிரபராதி என்று கூறினால், அதை நம்பக் கூடிய ஒரே உயிர் வள்ளிதான்! இன்று அந்தக் கிளியும் பறந்து விட்டது வானவெளிக்கு!

எப்படி வாழ்வேன்! அய்யோ எப்படி நான் நல்லவனாய் வாழ முடியும்!

இப்படி எண்ணிக்கொண்டே வேலன், அந்த இருளில்நடந்து மறைந்தான்! மீண்டுமவன் அந்த ஊர்ப்பக்கம் தலைகாட்டவில்லை!

"வேலன் எங்கேயோ ஓடிவிட்டான்!" என்றது ஊர்வாய்! பாவம், அவன் எங்கே போகப்போகிறான்? வள்ளியின் இருப் பிடம்தானே அவனுக்குப் புகலிடம்?

சென்னை ராஜ்ய பருவதராஜகுல சங்க
(உள்நாட்டு மீனவர்)
26-வது மாநாடு

16—6—1957-ல் சென்னை மெமோரியல் ஹாலில்
நடந்தேறியபோது

உயர்திரு. V. M. நடேச நாட்டார் அவர்கள்

நிகழ்த்திய

தலைமைச் சொற்பொழிவு.

N56SP
187253

இயற்கைவளம் செழித்துள்ள தெய்வத் தமிழ் நாட்டின் தலைநகராம் சென்னையம்பதியில் நடுநாயகமான பார்க் டவுன் மெமோரியல் ஹாலில் ஓர் ஆண்டிற்குப் பின் நாம் கூடியுள்ளோம். இங்குத் தேச பக்தியோடு தொண்டின் சிறப்பையுணர்ந்த செந்தமிழ் நாட்டுத் தவச்செல்வர்களும், பல வகுப்புகளைச் சேர்ந்த பெரியவர்களும், குலமுன்னேற்றத்தில் குறையாக் கொள்கையுள்ள குலாபிமானிகளும் கூடியுள்ள காட்சி எனக்கு மிக்க குதூகலத்தையும், உற்சாகத்தையும் ஊட்டுகின்றன.

எனக்குத் தலைமைப் பதவி தந்து பெருமையளித்த வரவேற்புக் குழுவினருக்கு என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த மாநாட்டை இனிது நடத்தித்தர உங்களுடைய அன்போடுகூடிய உதவியும் திருவருளும் துணைபுரியுமென நம்புகின்றேன்.

மாநாடுகளைச் சிறப்பாக நடத்திவிட்டால் மட்டும் போதாது. மாநாட்டில் தீர்மானிக்கும் விஷயங்களைச் செயல் முறையில் காண வேண்டிய எல்லா முயற்சிகளையும் செய்யவேண்டுமென்று உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

இந்த இனத்தவரைப் பற்றி அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் மற்றும் பெரும்பாலான பொது மக்களும் நன்றாக அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

நாங்கள் நாட்டார், பக்தர், மணியக்காரர், பூசாரி, நாய்க்கர், பிள்ளையென்ற பல பட்டப்பெயர்களுடன் சேர்ந்த பருவதராஜ குலத்தினர் (உள்நாட்டு மீனவர்) என அழைக்கப்படுகிறோம்.

நமக்குப் பல குறைகள் இருந்தபோதிலும் சென்ற ஆண்டு நாம் மிகவும் குதூகலத்துடனேயே கூடினோம். சென்ற ஆண்டிற்குப் பின்னர் அரசாங்கத்தவர்கள் நமது முக்கிய நோக்கமாகிய கல்விச் சலுகை அளித்துள்ளார்கள். அந்நன்றியை நாம் என்றும் மறவோம். ஆயினும், இன்று நாம் ஜீவனற்ற நிலையில் இங்குக் கூடியிருக்கின்றோம். வாழ்வற்றுத் தவிக்கும் நாம் ஒருவரோடொருவர் நமது குறைகளைப்பேசி பரிகாரம் காணவேண்டுமென்பதே இம்மாநாட்டின் சிறந்த நோக்கமாகும். நம்மீதுள்ள கருணையால் நமது குறைகளையும் வாழ்க்கையையும் நன்கு உணர்ந்துள்ள சென்னை மீன் இலாகா, ஸ்தலஸ்தாபன மந்திரியார் கனம். ஸ்ரீமதி. லூர்து அம்மாள் சைமன் அவர்கள் இம்மாநாட்டைத் திறந்து வைத்தமைக்கும் பிற்பட்ட வகுப்பினராகிய நமது வாழ்வை உயர்த்துவதில் மிகுந்த அக்கரைகொண்டு இங்கு நம்மை ஊக்குவிப்பதற்கும் அரசியலார்க்குத் தெரியப்படுத்துவதற்கும் இங்குச் சொற்பொழிவாற்ற வந்துள்ள யாவர்களுக்கும் 10 லக்ஷம் மக்கள் கொண்ட மீன் தொழில்புரியும் மக்களின் சார்பாக எமது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பெரியோர்களே!

மீன்பிடிக்கும் தொழிலையே நம்பி உயிர்வாழும் மக்களாகிய நம்முடைய நிலையையும், மற்ற வகுப்பினர்கள் நம்மை நசுக்கி அடிமைப்படுத்தி வாழ்வதையும், அதனால் நமது உரிமையும், வாழ்வும் பறிபோவதையும நன்கு உணர்ந்த பிரிட்டிஷ் அரசியலார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே நம்மவர்களை எல்லாம் ஒன்றுதிரட்டி அதனால் நாம் பலம்பெற்று வாழ்வுபெற மீனவர் கூட்டுறவு சங்கங்களை ஆரம்பிக்கச் செய்தார்கள். சொசைட்டியிருந்தும் இடையில் இலாபம் அடைந்துள்ள பல பணக்காரர்களின் போட்டியிலிருந்து நீங்கி நேரிடையாக நாம் நமது தொழிலைச்செய்ய அனுகூலமாக உள்நாட்டில் உள்ள ஆறு, ஏரி, குளம் முதலியவைகளில் மீன் பிடிக்கும் உரிமையை மீனவர் சொசைட்டிக்கே குத்தகை கொடுப்பதென்றும், குத்தகை கொடுக்கும்போது 5 வருட சராசரித் தொகைக்கே கொடுக்கவேண்டுமென்றும் அரசாங்கத்தார் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். இவைகளைக் கவனிப்பதற்கும் உத்தரவு தருவதற்கும் மேற்பார்வை பார்ப்பதற்கும் மீன் இலாக்கா அதிகாரிகளும், அரசியலாரின் கூட்டுறவு இலாக்காவும் இருந்துகொண்டிருக்கின்றன. இத்துணை ஆண்டுகளாக இவ்வுத்தரவு அமுலிலிருந்தும் தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சேலம் முதலிய ஜில்லாக்களில் மீனவர் கூட்டுறவு சொசைட்டிகள் ஆரம்பிக்கப்பெறாமலே இருந்தன. சில ஆண்டுகளாகத்தான் இச்சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி ஆங்காங்கு ஒன்றிரண்டு

கூட்டுறவு சொசைட்டிகள் ஆரம்பமாயிற்று. ஆயிரக்கணக்கான இடங்களில் இன்னும் சொசைட்டிகள் ஆரம்பிக்கப்படவே இல்லை.

கூட்டுறவு சொசைட்டிகளின் மூலம் தான் எல்லாத் தொழிலும் முன்னேறவேண்டும்; தொழிலாளிகளுக்கு ஊக்கம் தரப்படவேண்டும் என்று சங்கநாதம் புரிகின்ற இக்காலத்திலும்கூட இம்மீனவர்களை நமது அரசாங்கத்தார் கவனியாதது மிக வருந்தத் தக்கதொன்றாகும்.

கூட்டுறவு சொசைட்டிகள் ஆரம்பிப்பதற்குமுன் நம்மவர்களின் வாழ்க்கை நிலையைப்பற்றி தெரிந்து கொள்ளவேண்டியது மிகவும் முக்கியமென்று நம்புகின்றேன். நீர் நிலைகளில் மீன் பிடிக்கும் உரிமையை அந்தந்த ஊர்களில் உள்ள பிரமுகர்களும் பணக்காரர்களும் எடுத்துக்கொள்வார்கள். அதன் காரணமாக அவைகளில் மீன் பிடிக்கும் மீனவர்களிடம் வேலை வாங்கிக்கொள்வார்கள். சாதாரணமாகப் பெரிய மனிதர்கள் வீட்டில் நடைபெறும் சுபாசுபகாரியங்களில் குற்றேவல் செய்தல், கிராமங்களில் நடைபெறும் உற்சவங்களில் சுவாமி தூக்குதல், கோயில் காரியங்களைச் செய்தல் மற்றும் உபயோகமான பல காரியங்கள் செய்தல் முதலியன. தண்ணீர் வடியும் காலத்தில் சுவாமியின் உற்சவத்தைக் காட்டி தகுந்த இலாபத்தை வைத்துக்கொண்டு மீனவர்களுக்குக் கொடுப்பார்கள். மீன் பிடிப்பதில் இலாபம் வந்தாலும் வராவிட்டாலும் மீனவர்கள் அவர்கள் சொல்லும் தொகையைக் கொடுத்தே தீரவேண்டும். அப்படித் தராவிட்டால் பிழைப்புப்போவதோடு மற்றக் காலங்களிலும் நீர் நிலைகளில் வலைபோட்டுப் பிழைக்க முடியாது. மீனவர்கள் இல்லாத ஊராயிருந்தால் வெளியூர்களிலிருந்து மீன் பிடிக்க வருபவர்களுக்கு இன்னும் தொகை அதிகமாகப்போகும். இல்லையானால் மிகவும் குறைந்த கூலிக்கு மீன் பிடித்துத் தரவேண்டும். அவர்கள் தரும் அக்கூலி மிகமிகக் குறைந்தே இருக்கும். இவ்வளவையும் மீறி பொது ஏலத்தில் கேட்க ஆரம்பித்தால் என்னபோனாலும் எப்படியானாலும் மீனவர்களுக்கு ஏலம் விடமாட்டார்கள். எவ்வளவு உயர்ந்த தொகைக்கும் கேட்பதற்கு அவர்கள் தயங்கமாட்டார்கள். ஏன்? எவ்வளவு குறைந்த கூலிக்கும் மீன்பிடித்துக்கொடுக்க மீனவர்களை வற்புறுத்த அவர்களுக்கு வழிதெரியும்! இதனிடையில் ஊர்களில் உள்ள பிரமுகர்களில் கட்சிப் பிளவுகள் இருக்குமானால் ஏலத் தொகை விஷம்போல் ஏறிக்கொண்டேபோகும். குறைந்த கூலிக்கு மீன் பிடித்துக்கொடுக்க மீனவன் இருக்கின்றான் என்ற தைரியத்தால்தான். ஊரில் பிளவு இல்லையானால் 1000 ரூபாய் பெறுமான மகசூல் இருந்தாலும் போட்டியின்றி 50 ரூபாய்க்கு எடுத்துக் கொள்வார்கள். மீனவர்கள் அவர்களிடம் 1000 ரூபாய்க்கேனும் வாங்கிக்கொள்ள முன்வருவார்களே யொழிய பகிரங்க ஏலத்தில் குறைந்த தொகைக்குக்கூட கேட்க முன்வரமாட்டார்கள். அவர்கள் ஏலம் கேட்க ஆரம்பித்தால் மறுபடியும் அவ்வூர்ப் பக்கம்

தலைகாட்ட முடியாது. இத்தகைய அற்புதங்கள் இன்னும் ஆயிரக்கணக்கான கிராமங்களில் நடந்துகொண்டு தானிருக்கின்றன. 40, 50 வருடங்களாக அரசியலார் தங்கள் கணக்குகளைத் திருப்பிப்பார்க்கட்டும். ஒரு குறிப்பிட்ட ஏரி எவ்வளவு ரூபாய்க்குப் போயிருக்கிறது? யார் ஏலம் எடுத்திருக்கிறார்கள்? என்பதை அறியவேண்டியது முக்கியம். இவர்கள் ஏலம் எடுத்து இவர்களே மீன்பிடிப்பதாயிருந்தால் இவ்வளவும் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. மீன் பிடிப்பது நாங்கள்; இலாபம் அனுபவிக்கவேண்டியது இடையேயுள்ள அவர்கள். இந்தக் காரணங்களால்தான் மீனவர்களின் வாழ்க்கை உயராமலும், அடிமை வேலை நீங்காமலும் ஸ்திரமாக நிலைபெற்றுவிட்டது. இதனாலேயே அரசாங்கத்தார் மீனவர் சொஸைட்டிகளுக்கே மீன் குத்தகைகளைத் தரவேண்டுமென்றும், அப்படித் தரும்போது 5 வருட சராசரிக்குத் தரவேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். இது அரசாங்கத்தவர்கள் நன்கு உணர்ந்த விஷயங்கள்.

அரசாங்கத்தவர்களின் இவ்வுத்தரவுகளினால் மீனவர்கள் உயர்ந்துவிட்டார்கள்! பலர் அமைச்சர்களாய், சட்ட சபை மெம்பர்களாய், நியாயாதிபதிகளாய், நியாயவாதிகளாய், வைத்தியர்களாய், இன்ஜினீயர்களாய், லட்சாதிபதிகளாய், தொழிலதிபர்களாய் ஆகிவிட்டார்கள் என்று அரசாங்கத்தார் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்கள் என்று நினைக்கிறோம். பழைய கருப்பனே கருப்பனாய்த்தான் மீனவன் இருக்கின்றான். தீண்டாதவர்களை விட மிகவும் தாழ்மையான நிலையில் இவன் அடிமை வாழ்வே வாழ்கின்றான். சுதந்தர இந்தியாவிலும் இவன் சுதந்தரமற்று எடுப்பார் கைப்பொம்மையாக வாழ்கின்றான் என்பதை அரசாங்கம் உணரத்தவறிவிட்டது. நாங்கள் போடும் கூக்குரல் அரசாங்கத்தினரின் செவிகளில் கேட்கவில்லை.

நீர் நிலைகளில் சில மீன் இலாக்காவினரிடம் இருக்கின்றன. பல புறம்போக்குகளிலும், பஞ்சாயத்தாரிடமும் இருக்கின்றன. எல்லா நீர்நிலைகளையும் மீன் இலாக்காவே எடுத்துக்கொண்டு எங்களுக்குக் குத்தகை கொடுங்கள் என்று நாங்கள் விண்ணப்பித்துக் கொள்ளாத மாநாடுகளே இல்லை.

இஃதிங்ஙனமாக, சென்ற விழாவின்போது கனம் முதல் அமைச்சர் காமராஜ் நாடார் அவர்கள் அரசாங்கத்தார் உங்களுக்கு அளித்திருக்கும் சலுகைகள் G.O. 200, B.S.O. 211 ஆர்டர்கள் எப்போதும் மாறாது என்றும் எந்தவிதமான சங்கடங்களையும் கொடுக்காது என்றும் சுமார் 4000 மீனவர்களின் முன்னிலையில் வாக்குறுதி அளித்துள்ளார்.

அடுத்த நான்கு மாதத்தில் 1—10—56-ல் அரசாங்கம் (G.O. No 3696) உத்தரவு அனுப்பியுள்ளது, அந்த உத்தரவின் எதிரொலியாக 5 வருட சராசரி மறைந்துபோய் மீன் இலாக்கா

வினர் வைத்ததுதான் சட்டம் என்றபடி குத்தகைத் தொகையைத் தங்கள் இஷ்டம்போல் உயர்த்திவிட்டார்கள். இதன்பொருட்டு முதல் அமைச்சரிடம் எங்கள் குறைகளை விண்ணப்பித்துக் கொண்டபோது அவர் பார்க்கலாம் என்று சொன்னார்கள். பின்னர் 2-2-1957-ல் (Memorandum No. 11485/E 1/57-1) அரசாங்கம் அனுப்பிய உத்தரவு எங்களைக் கதிகலங்கச் செய்துவிட்டது. எங்கள் வாழ்வுக்கே உலை வைத்துவிட்டது. எல்லா நீர்நிலைகளையும் பகிரங்க ஏலத்தில் விடவேண்டுமென்பதே அவ்வுத்தரவு.

பகிரங்க ஏலத்தில் நாங்கள் கேட்கமுடியுமா? கேட்டால் எங்களுக்கு அவ்வூரார்கள் விடுவார்களா? அப்படியே கேட்டாலும் பின்னர் நாங்கள் அவ்வூரில் நிம்மதியாய் வாழ முடியுமா? அவர்களே பகிரங்க ஏலத்தில் எடுத்தாலும் அவர்கள் மீன் பிடிப்பார்களா? மீன் பிடிப்பதே பாவம் என்று எங்களை எட்டி நிற்கச் சொல்லுகின்றவர்கள் இன்று ஏலத்தில் முதன்மையாக நின்று போட்டியிடுகின்றார்கள்? ஏன் ஏலம் கேட்கிறார்கள்? இதை அரசாங்கம் உணரவேண்டும். இது வியாபாரமா? அல்லது எங்கள் வாழ்க்கைத் தொழிலா? இது வியாபாரமாயிருந்தால் ஒன்று இல்லாவிட்டாலும் இன்னொன்றைச் செய்யலாம்? தொழிலை விடுவதற்கு எப்படி முடியும்? தொழிலைவிட்டால் வாழ முடியுமா? விவசாயிகள், மிராசுதாரர்கள், மற்றும் இதர வியாபாரிகள் இவர்களுக்கும் மீன் பிடிப்பதற்கும் என்ன சம்பந்தம்? இவர்கள் ஏலம் எடுத்து இவர்களே மீன் பிடிப்பதாயிருந்தால் அதைப்பற்றிப் பேசவேண்டியதில்லை. குறைந்த கூலிக்குப் பிடித்துக்கொடுக்க மீனவன் இருக்கின்றான் என்ற தைரியம் இருந்தால் எவ்வளவுக்கும் கேட்பார்கள். மீனவர்கள் சுதந்தரமாக ஜீவிக்கிறார்கள் என்பதைக் கெடுக்கவேண்டும் என்ற கொள்கையினாலேயே அதிகத் தொகைக்குக் கேட்க ஆரம்பிக்கின்றார்கள், இதற்கு முன் 40 வருடக் கணக்கை எடுத்துப்பார்க்கட்டும். இன்றைக்கு மீனவர் சொசைட்டிக்குக் குத்தகை கொடுக்கின்றார்கள் என்ற காரணத்துக்காக அதிகமாகக் கேட்பவர்கள் இத்தனை வருஷங்களாகக் குறைந்த தொகைக்கு எடுத்துவந்ததன் மர்மம் தான் என்ன? ஏன் இவ்வளவு நாட்களாக அரசாங்கம் அதைக் கவனிக்கத் தவறிவிட்டது. இவைகளைச் சிந்தித்துப் பார்க்கட்டும். இவ்வருஷம் அரசாங்கம் செய்யும் இவ்விஷப் பரீக்ஷையால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? சில இடங்களில் போட்டியிருந்தால் அதிகத் தொகை கிடைத்திருக்கும். சில இடங்களில் போட்டியில்லாதிருந்தால் குறைந்த தொகை கிடைத்திருக்கும். அதனால் அரசாங்கம் திருப்தியடையுமா? மீனைக்கொண்டு ஏலம் கேட்கிறார்களா? போட்டியைக்கொண்டு ஏலம் கேட்கின்றார்களா? எது எப்படியாயினும் சரி அதை மதிப்பிடுவதற்கு மீன் இலாக்கா இல்லையா? மீன் இலாக்காவால் அதைமதிப்பிடமுடியாதா? மதிப்பிடமுடியாத மற்ற வகுப்பினர்கள் அங்கு வேலைசெய்கிறார்கள் என்று அரசாங்கம் நினைக்குமானால் அவர்களை ஏன் அவ்வேலையில் அமர்த்த

வேண்டும்? மீன் இலாக்காவின்மீது அரசாங்கத்திற்கு நம்பிக்கை இல்லையா? இவர்கள்செய்த இவ்விஷப் பரீக்ஷையால் அத்தொழில் செய்பவன் ஒரு வருஷம் திண்டாடவேண்டாமா? இம்மாதிரி பரீக்ஷை செய்பவர்கள் இன்றொன்றை மறந்துவிட்டார்கள். ஏரி வடியும் காலத்தில்தான் மீன்பிடிக்க ஏலதாரர்கள் அனுமதிப்பார்கள். மற்றக் காலங்களில் மீன்பிடிப்பது எப்படி? மீன்பிடிக்காமல் அவன் வாழ்வது எப்படி? அந்தக் காலங்களில் கிராமங்களில் மீன்கிடைக்கின்றனவே அது எப்படிக்கிடைக்கிறது? சமுத்திர மீன்கள் உள்நாட்டில் வருவதற்கும் வழி இல்லையே? வருஷம் முழுவதும் மீன் பிடிப்பவன் ஏலம் எடுத்தவர்களின் தயவை எதிர்பாராமல் வாழமுடியுமா? அரசாங்கம் மீன் பிடிப்பவர்களுக்கு என்ன கூலிகொடுக்கிறது. ஏலம் எடுப்பவர்கள் அதே கூலியை அவர்களுக்குக்கொடுக்கிறார்களா என்பதையும் கவனிக்கவேண்டும். அல்லது அதே கூலியைக் கொடுக்கச் சட்டம் இயற்றவேண்டும். அல்லது ஏலம் எடுத்தவர்களே பிடித்துக் கொள்ளவேண்டும். இவைகளை விசாரணைசெய்து பார்க்கட்டும். அப்போது அரசாங்கம் இதன் உண்மையை நன்கு உணர்ந்து கொள்ளமுடியும்.

மீன் உணவு மிகவும் சத்துள்ளது; விலை மலிவானது; எளிதில் ஜீரணிக்கக்கூடியது என்று சொல்லப்படுகிறது. சிலவகை மீன்கள் சில வியாதிகளுக்கு மிகவும் நல்லது என்பது அனுபவ பூர்வமாகக் கண்ட உண்மை. இவ்வளவு அநுகூலங்களிருந்தும் மீன் அதிகமாக வளர்வதற்கோ, மீன் பிடிப்பவன் வாழ்வதற்கோ அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இரண்டோரிடங்களில் மீன் குஞ்சுகளைவிட்டு வளர்ப்பதும் பள்ளிக்கூடங்களை ஆரம்பித்திருப்பதும், உப்பு, நூல் முதலியவைகள் குறைந்த விலைக்குக்கிடைப்பதையும் லக்ஷக்கணக்கில் அவர்கள் கணக்குக் காட்டலாம். ஆனால், மீன் பிடிப்பவன் உயர்ந்திருக்கின்றானா என்பதை அரசாங்கம் உணரவேண்டும். அவன் வாழ்வு வளம்பெற்றிருக்கிறதா? அத்தொழில் செய்பவன் வாழ வழியற்றுத்தான் கிடக்கிறான். காரணம் என்ன? அவனுக்கு வாழ்க்கையில் வசதியிருந்தால் அந்நிலையில் இருப்பானா? போதிய வரும்படி அந்தத் தொழிலில் கிடைக்கவில்லை என்பதை அது எடுத்துக்காட்டவில்லையா? திடீரென்று ஒரு வருஷத்திற்கு அமுலில் இருக்கும் என்று உத்தரவுபோட்ட அரசாங்கம் ஒரு வருஷத்திற்கு அத்தொழிலைச் செய்பவர்களுக்குக் கஞ்சி வார்ப்பதற்காவது வழி வகை செய்யவேண்டாவா? இந்த உத்தரவுக்குப் பின் கனம். முதன் மந்திரியார், முன்னாள் மீன் இலாக்கா அமைச்சர் கனம். பக்தவத்சலம் B.A., B.L., அவர்கள், இப்போதைய அமைச்சர் கனம் ஸ்ரீமதி லூர்து அம்மாள் சைமன் அவர்கள் முதலியவர்களைப் பேட்டிகண்டு எங்கள் குறைகளை எல்லாம் எடுத்துச்சொல்லியும் எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை. உத்தரவு அனுப்பிய 2-2-57-க்குமுன் சொசைட்டிகளுக்குக் கொடுப்பதாக மீன் இலாக்கா சிபார்சுசெய்த சில நீர் நிலைகளையாவது கொடுக்கவேண்டும்

என்று விண்ணப்பித்துக் கொண்டோம். அரசாங்க உத்தரவுகளுக்கும், மீன் இலாக்கா உத்தரவுகளுக்கும், கலெக்டர் உத்தரவுகளுக்கும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இருப்பதாகவே காணோம். சுற்றிச்சுற்றி அலைந்து பார்த்ததுதான் மிச்சமேதவிர வேறொன்றுமில்லை. இங்கிலையில் ஒரு தொழில்செய்யும் மக்களை ஒதுக்கிவிட்டிருப்பது அரசாங்கத்தினர்க்கு நேர்மையாகத் தோன்றவில்லை.

இதனால் உள்ள பாதகங்கள் யாவும் மீன் இலாக்காவுக்கு நன்ருகத் தெரியும். மீன் இலாக்கா எங்கள் நலனுக்காக இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே யொழிய இதைக்குறித்து எந்த வழி வகைகளையும் செய்ததாகத் தெரியவில்லை. வாழ வழியற்றுக்கிடக்கும் இச்சமுதாயத்திற்கு வாழ்வு அளிக்க அரசாங்கம் முற்படப் போகின்றதா? அல்லது மீன் வியாபாரம்செய்து அரசாங்கம் தன் வரும்படியை உயர்த்திக்கொள்ளப் போகின்றதா? என்பதே இப்போதைய எங்கள் கேள்வி. முதல் 5 ஆண்டு திட்டத்திலும் 2-வது 5 ஆண்டு திட்டத்திலும் கோடிக்கணக்காக ரூபாய்கள் மீன் அபி விருத்திக்காகச் செலவுசெய்யும் அரசாங்கம், ஒரு சில ஆயிரங்கள் அதிகம் வருமோ வராதோ என்று சொல்லக்கூடிய விஷப்பரீக்ஷையில் இறங்கி இருப்பது மிகமிக வருந்தத்தக்கது. மைனுரிட்டிகளால் என்ன ஆகும் என்ற காரணத்தால் மீனவர் கூட்டுறவு சொசைட்டிகள் சரிவர வேலைசெய்யவில்லை-ஏமாற்றம் நடக்கிறது—என்று சொல்லப்படுகிறது. சொசைட்டிகளை மேற்பார்வையிட ஆடிட்டர்களும், கோவாப்பரேடிவ் இன்ஸ்பெக்டர்களும், மீன் இலாக்கா அதிகாரிகளும் அடிக்கடி வந்து கண்காணிப்பதில் அரசாங்கத்திற்கு நம்பிக்கை இல்லை என்றுதான் தெளிவாகிறது. ஒரு சில பொது மக்களை எலெக்ஷன் காலத்தில் திருப்திசெய்யவேண்டுமானுல் மைனுரிட்டிகளாக உள்ள எங்களைப் பட்டினிபோட்டு, அடிமைப்படுத்தி அவல நிலைக்குக் கொண்டுவரவேண்டியது அவசியமாகிறது. வாயிருந்தும் ஊமையாயிருக்கிற மைனுரிட்டிகளாகிய எங்களால் என்ன செய்யமுடியும்? எந்தக் காரணத்தைக்கொண்டு இவ்வுத்தரவு வந்ததாயிருந்தாலும் ஒன்றுமட்டும் நிச்சயமாய்த் தெரிகிறது. அரசாங்கம் மீன் பிடிப்பவர்களை மனிதர்களாகக் கருதவில்லை என்பதுதான் அது. நாங்களும் மனிதர்கள் தாம்—எங்களுக்கும் சுதந்தரம் உண்டு—வாழ வகையுண்டு -கேட்பதற்கு வாய்உண்டு-என்பதை அரசாங்கம் ஒரு சிறிதும் உணரவேயில்லை.

மீன் மார்க்கெட்டுகளை மீனவர் கோவாபரேடிவ் சொசைட்டிக்கேகொடுப்பதுஎன்று சட்டமிருந்தும் பகிரங்க ஏலத்தில்விட்டு பணக்காரர்கள் எடுத்துக்கொண்டு எங்களைப் படுத்தும்பாடு கொஞ்சமல்ல. அவைகளையும் 5 வருட சராசரிக்கு மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கே கொடுக்கவேண்டும் என்று நாங்கள் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிரும். அரசாங்கம் இதையும் கவனிக்கவில்லை. வெளியார்க்கு ஏலம்விட்டால் ஏலதாரர் சரிவர வசூல் செய்கிருரா மற்ற வசதிகள் செய்துதருகிருரா என்பதையும் அரசாங்கம் கவனிப்பதில்லை.

இம்மாதிரி சொல்லிக்கொண்டே போனால் ஏடுஇடம் தராது. இனி அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதே இப்போதைய கேள்வி. என் மனதில்தோன்றிய சிலவற்றை அவசியம் கூறவேண்டியவனாக இருக்கின்றேன்.

1. அரசாங்கம் சமீபத்தில் பிறப்பித்த எல்லா உத்தரவுகளையும் உடனடியாக ரத்து செய்யவேண்டுகிறோம்.

2. மீன் தொழில் செய்பவர்களின் பொருளாதாரம், அந்தஸ்து, கல்வி முதலிய விபரங்களை விசாரணைசெய்து வெளிப்படுத்துவதோடு அதற்கான காரணங்களையும் வெளிப்படுத்த வேண்டுகிறோம்.

3. உள்நாட்டிலுள்ள எல்லா நீர்நிலைகளையும் மீன் இலாக்காவே எடுத்துக்கொண்டு பழையபடியே G.O. 200; B.S.O. 211; உத்தரவுப்படி மீனவர் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு 5 வருட சராசரி தொகைக்குக் குத்தகை கொடுக்கவேண்டுகிறோம்.

4. மீனவர்களின் குறைகளை அரசாங்கத்தினர்க்கு எடுத்துக்கூற எல்லா ஸ்தல ஸ்தாபனங்களிலும், சட்ட சபையிலும் தொழில் அடிப்படையில் ஒரு ஸ்தானத்தை ஒதுக்கித் தரவேண்டுகிறோம். ஏனெனில், எங்களால் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறமுடியாது.

5. மீன் இலாக்காவைத் தனியாகப் பிரித்து தனி அதிகாரியின்கீழ் நடத்தவேண்டுகிறோம்.

6. மீன் மார்க்கட்டுகளை 5 வருட சராசரி குத்தகைக்கு மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கே கொடுக்க வேண்டுகிறோம்.

7. எங்கள் குறைகளை உள்ளபடி ஆராய்ந்து அறிய ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு க்ஷேமநல அதிகாரியை எங்கள் இனத்தவரில் ஏற்படுத்தவேண்டுகிறோம்.

கல்வி, சுகாதார வசதி, வீட்டு வசதி முதலிய இன்னும் பல குறைகள் எங்களுக்கு இருக்கின்றன. இருப்பினும் தற்போது மிகவும் அவசரமும் அவசியமுமான சிலவற்றைமட்டும் இப்போது வற்புறுத்திச் சொல்லியுள்ளோம்.

நிற்க, சமூகப் பெரியோர்களுக்கும் வாலிபர்களுக்கும் ஒரு சில வார்த்தைகளைக் கூறிவிட்டு முடித்துக் கொள்ளுகின்றேன். இப்போது அரசாங்கத்தவரால் கொடுக்கப்பட்டிருக்கும் உத்தரவு நீங்கும் வரையில் நீங்கள் உறங்கவேகூடாது. நமது கூக்குரல் பொது மக்களுக்கும், அதிகாரிகளுக்கும், அரசாங்கத்தினர்க்கும் நன்கு தெரியவேண்டும். நாம் கேட்பது நியாயம் என்பதை யாவரும் உணரவேண்டும். ஊரிலுள்ள ஏரிகள் யாவருக்கும் சொந்தம் என்று ஒரு சில இடங்களில் கூறப்படுகிறது. அது உண்மையேயாயின் ஊரிலுள்ள எல்லாச் சொத்துக்களும்,

நஞ்சை, புஞ்சை நிலங்களும் எல்லோருக்கும் சொந்தமாகத் தானேவேண்டும். ஒரு சிலர் எல்லாச் சொத்துக்களையும் அனுபவிக்க ஒரு சிலர் ஒன்றுமில்லாமல் வாடி வதங்கிச் சாவதா என்பதை எடுத்துக்கூறவேண்டும். எல்லா அதிகாரிகளையும், அரசியலாரையும் வரவழைத்து ஒவ்வோரிடத்திலும் கூட்டம் கூட்டி இருக்கும் நிலையை—உங்களை நடத்துவிக்கும் முறைகளை—நீங்கள் படும் அவஸ்தைகளை—உங்கள் நியாயமான கோரிக்கைகளை—அவர்களுக்கு எடுத்துக்கூறவேண்டும். 'வானிடிந்துவீழினும் அச்சமில்லை அச்சமில்லை' என்ற வாக்கியத்தைக் கடைப்பிடித்து உங்கள் வாழ்வு வளம்பெறும் வரையில் சதா பிரச்சாரம்செய்து கொண்டே இருக்கவேண்டும். உங்கள் ஊருக்குவரும் எந்த அதிகாரிகளையும் நீங்கள் சும்மா விட்டுவிடவேண்டாம். அவர்களுக்கு விஷயத்தை விளக்குங்கள். வாராதவர்களையும் வேண்டி அழைத்து வந்துசொல்லுங்கள். கட்சிப் பூசல்களில் நீங்கள் இப்போது இறங்கவேண்டாம். நமது ஜீவியம் உயரும்வரையில் கக்ஷிப் பிரச்சாரங்கள் செய்யவேண்டாம் என்பதை உங்களிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் யாவும் செயல்பட உங்கள் ஒத்துழைப்பும் ஊக்கமும் வேண்டும்.

இம்மாநாட்டை திறந்துவைத்த மீன் இலாக்கா அமைச்சர் ஸ்ரீமதி லூர்து அம்மாள் சைமன் அவர்கள் நமது குலம் நலம்பெற நமக்கு அமைச்சராக வந்துள்ளார்கள். நம்மக்களுக்கு ஆகவேண்டிய பல நற்காரியங்களையும் செய்து தருவதாயும் வாக்களித்துள்ளார்கள். ஆண்டவனருளால் அவர்கள் நீடூழி வாழவேண்டுகிறோம். சமூகத்தின் நன்மையை நாடி இங்குப்போந்துள்ள பெரியோர்களுக்கும் சமூக அன்பர்களுக்கும் மற்றும் யாவருக்கும் என் நன்றிகலந்த வணக்கம் உரித்தாகுக.

——(o)——

சென்னை ராஜ்ய பருவதராஜகுல சங்கத்திற்குத் திருமண நன்கொடை

9-6-57 திருமயிலை T. கபாலி நாட்டார் இல்லத்தில் நடைபெற்ற திருமணத்தில் திரு. P. அண்ணாமலை ரூ. 2, திருமதி. சரோஜா ரூ. 5, திரு. இரத்தின நாட்டார் ரூ. 1, திருமதி. சகுந்தலா ரூ. 2.

9-6-57 குன்றத்தூர் திரு. பலராமன்—திருமதி. நாகம்மாள் ரூ. 2.

வேண்டுகோள் : இம்மாதிரியே எல்லா ஊர்களிலும் நடைபெறும் திருமணத்தின்போது நன்கொடை வசூலித்து அனுப்பி வைத்தால் சங்கத்திற்குப் பெரும் உதவியாகும். (ஆசிரியர்).

சென்னை ராஜ்ய பருவதராஜகுல (உள்நாட்டு மீனவர்) சங்க 26-வது மாநாடு,

சென்னை ராஜ்ய பருவதராஜகுல உள்நாட்டு மீனவர் 26-வது மாநாடு சென்னை பார்க்டவுன் மெமோரியல் ஹாலில் உயர்திரு. V. M, நடேச நாட்டார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கடவுள் வணக்கத்திற்குப் பின் உயர்திரு. C. பஞ்சாக்ஷரம் அவர்கள் மீன் கொடியை ஏற்றிவைத்து கொடியின் சிறப்பைப் பற்றி ஒரு சொற்பொழிவாற்றினர். தேசீயக்கொடியை உயர்திரு. அ. மாரியப்ப மணியக்காரர் அவர்கள் ஏற்றிவைத்தார்.

திரு. K, நடேச நாட்டார் அவர்களும், திரு. P. K. வேணுகோபால் அவர்களும், திரு. V. M. நடேச நாட்டார் அவர்களைத் தலைமைவகிக்கும்படி கேட்டுக்கொண்டனர். திரு. A. கோவிந்தசாமி அவர்கள் தலைவருக்கு வரவேற்புரை வாசித்தளித்தார். இடப்பாடி திரு. P. S. வையாபுரி பக்தர் அவர்கள் வரவேற்புரை வாசித்தார். திரு. P. A. நடேசன் அவர்கள் கனம் லூர்துஅம்மாள் சைமன் (மீன் ஸ்தலஸ்தாபன அமைச்சர்) அவர்களுக்கு ஒரு வரவேற்பு இதழ் வாசித்து அளித்தார். நீண்ட கரகோஷங்களுக்கு இடையே கனம். லூர்து அம்மாள் சைமன் அவர்கள் 26வது மாநாட்டைத் திறந்து வைத்து சொற்பொழிவாற்றினர்கள். "விவசாயத்துக்கு அடுத்தபடியாக உள்ள பெரிய தொழில் மீன்பிடித் தொழிலே மீன் பிடிப்புத் தொழிலின் அபிவிருத்திக்காக இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் எட்டுக் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மத்ய சர்க்கார் செலவு 4 கோடி. ராஜ்யங்களின் செலவு 8 கோடி. 600 மைல் நீளமுள்ள கிழக்குக் கடற்கரையில் மீன்வளம் ஏராளமானதுடன் சங்குகள் முத்துக்கள் எடுப்பதும் லாபகரமானது. மீன் வளத்தைப் பயன்படுத்த 84.74 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம் மீன் பிடிப்பதற்கான நவீன சாதனங்களை மீனவர்கள் உற்சாகத்துடன் பயன்படுத்துவது மகிழ்ச்சிக்குரியது. மோட்டார் படகுகளையும் நைலான் வலைகளையும் அவர்கள் விரும்புகிருர்கள்.

1955-56ல் கிட்டத்தட்ட 2 கோடி மீன் விதைகள் திரட்டப்பட்டு ஏரிகள் குளங்கள் கிணறுகளில் சேமிக்கப்பட்டன. மேட்டூர், பவானி, மணிமுத்தாறு தேக்கங்களில் மீன்வளம் அபிவிருத்தியடைந்துள்ளது. ஒவ்வொரு ஜில்லாவிலும் கிராம மீன்வள

நிலைய யூனிட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. பவானிசாகர், பூண்டி போன்ற முக்கிய இடங்களில் உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீன்களின் போக்குவரத்து, விற்பனை வசதிகளால் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். சமுதாயநல திட்ட பிரதேசங்களிலாவது இவ்வாறு செய்யப்படும் மீனவர்கள் கூட்டுறவு சங்கங்களில் சேரவேண்டும். ராஜ்யத்தில் 150 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. பழைய கடனைத் தீர்க்கவும் படகுகள் முதலியவை வாங்கவும் நீண்டகால கடன்கள் வழங்கப்படுகின்றன. 1956–57ல் 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் 25 கூட்டுறவு சங்கங்களுக்குத் தரப்பட்டன.

சில ஜில்லாக்களில் ஜில்லா மீனவர்கள் கூட்டுறவு சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் மீனவர் பள்ளிகள் உள்ளன. மோட்டார் படகுகள் ஓட்ட பயிற்சியளிக்கும் இரண்டு பள்ளிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீனவர் ஜாகை வசதியை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. சென்னை நகரில் 280 மீனவர்களைப் புனர்வாழ்வளிக்க நிலங்கள் ஆர்ஜிதம் செய்து வசதிகள் செய்துதர ரூ. 4.14 லட்சம் செலவிட ஒரு திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

தங்கள் நிலையை உயர்த்த மீனவர் ராஜ்யம் பூராவுக்குமாக ஒரு ஸ்தாபனம் வைத்துக்கொள்ளுமாறு யோசனை கூறுகிறேன். மீன் இலாகாவைத் தனி இலாகாவாக்குவது சாத்யமல்ல.

சமீபத்தில் உங்களுக்கு லீஸ் குத்தகைவிடாமல், பொது ஏலத்தில்விட்டது எனக்குத்தெரியும், பொது ஏலத்தில் விடுவதுசரியான வழிதான். ஆனால் மீனவர்கள் அல்லாத பிறர்களுக்கோ, மீன்தொழிலில் ஈடுபடாதவர்களுக்கோ விடுவது சரியல்ல. உண்மையிலேயே மீன் பிடிப்பவர்கள் தவிர மற்றவர்கள் நடுவில்பிரவேசித்து அவர்களுக்குத் தொந்திரவுகொடுப்பது சரியல்ல; ஒழுங்குமல்ல. ஆனால் மற்றவர்கள் மீன்பிடிப்பவர்களுக்கு உதவிசெய்வதுதான் நியாயம். தவிர இந்த வருஷம் கவர்ன்மெண்ட் ஆர்டர் கொஞ்சம் கால தாமதப்பட்டு வந்தமையாலும், அந்த ஆர்டர் உடனே புரியாமையாலும் இவ்வாறு நிகழ்ந்தன.

அடுத்த ஆண்டில் லீஷ் குத்தகை முதலிய விஷயங்களைப் பூராவும் வெற்றிகரமாகவும், ஒழுங்கான முறையிலும் மீனவர்களுக்குவிட என்னால் கூடியஉதவி புரிகின்றேன், உங்களுக்கு எப்பொழுது என்ன தேவைப்படுகின்றதோ என்னிடத்தில் தெரிவித்தால் அதற்குண்டான நல்ல வழிகளையும், மீன்பிடிப்பதில் நல்ல வழிகளையும் செய்யமுடியும் என்று தெரிவித்துக்கொண்டு இன்றைய மாநாடு வெற்றிகரமாகவும், நல்ல முறையிலும் நடந்தமை குறித்து சந்தோஷப் படுகின்றேன் எனக்கூறி முடித்தார்கள்.''

திரு. வித்வான் K. நடேச நாட்டார் அவர்கள் ஆண்டு அறிக்கை வாசித்தார். சென்னை அசெம்பிளி சபாநாயகர் ஸ்ரீ U. கிருஷ்ணராவ் M.B., B.S. அவர்கள் கனம் முதல் அமைச்சர் K. காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து காங்கிரசின் மேன்மையைப் பற்றியும், காமராஜ் அவர்களின் பொதுநலத் தொண்டின் சிறப்பைப்பற்றியும், அவர் செய்துள்ள தியாகத்தைப் பற்றியும் ஒரு சொற்பொழிவாற்றினர். பின்னர் தலைவர் அவர்கள் தமது தலைமைப் பிரசங்கத்தை வாசித்து முடித்தார்.

ஸ்ரீமதி T. N. ஆனந்தநாயகி B.A., B.L., M.L.A., அவர்கள் மீனவர்களின் நிலையை விளக்கிப் பேசினர்கள். நீர் நிலைகளில் மீன் பிடிக்கும் குத்தகையை ஏலத்தில் விடுவதனால் அரசாங்கம் மீனவரைப் பட்டினிபோடுகிறது என்பதையும் ஏலம் கேட்பவர்கள் மீன் பிடிப்பவர்களாகவே இருந்தால் ஏலம் போடுவது நியாயம் என்பதையும், உள்நாட்டு மீனவர்களின் நிலையை உயர்த்த அரசாங்கம் இயன்றதைச் செய்யவேண்டுமென்றும் விளக்கிப் பேசினர்கள்.

திரு. T. S. கோவிந்தசாமி (சென்னை மாஜி உதவி மேயர்) அவர்களும், திரு. M. கன்னியப்பன் (சென்னை நகராண்மைக் கழக உறுப்பினர்) அவர்களும், திரு. K. N. சீனிவாசன் B.A., B.L., (சென்னை நகராண்மைக் கழக மேயர்) அவர்களும் சொற்பொழிவாற்றினர்கள்.

சென்னை அரசாங்க விவசாய இலாக்கா டிப்டி செக்ரடரி உயர்திரு. முருகேச முதலியார் அவர்களும், மீன் இலாக்கா டிப்டி டைரக்டர் ஸ்ரீ வரதராஜன் M.A., அவர்களும் மீனவர்களின் நிலை உயர சில யோசனை கூறினர்கள், திரு. சப் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் மீனவர்களுக்கு கடன் தரும் விஷயமாய் விளக்கிக் கூறினர்கள். திரு. A. கோவிந்தசாமி அவர்கள் சமூக விஷயமாகப் பேசினர்.

பின்னர் தீர்மானங்கள் யாவும் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன. புதிய நிர்வாகஸ்தர்கள் தேர்தல் நடைபெற்றன.

தலைவர் :—உயர்திரு. V. M. நடேச நாட்டார்.

உபதலைவர்கள் :—

உயர்திரு. K. திருவேங்கடசுவாமிகள், ஆற்காடு.
,, A. மாரியப்ப மணியக்காரர், கரந்தை.
,, S. K. G நாராயண பக்தர், இடப்பாடி.
,, K. சண்முகம் B.A., B.L., மயிலை.

காரியதரிசிகள் :—உயர்திரு. வித்வான் K. நடேச நாட்டார்
,, A. கோவிந்தசாமி
,, P. A. நடேசன்.

பொக்கிஷதாரர் :—உயர்திரு. A. வடமலை நாட்டார்,
சைதாப்பேட்டை.

கமிட்டி மெம்பர்கள் யாவரும் முன் வருஷத்தில் இருந்தது போலவே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களோடு கீழ்க்கண்டவர்கள் செயல் கமிட்டி மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

உயர்திரு. M. மொட்டையன் பூசாரி, ஆத்தூர் (சேலம்)
,, R. பெருமாள் பத்தர், நரசிங்கபுரம், ஆத்தூர்
,, அண்ணமலை நாட்டார், புதுச்சேரி
,, K. வேங்கையப்ப நாட்டார், கருங்குழி.

தலைவர் தமது முடிவுரையில் மாநாடு இனிது நடைபெறுவதற்கு உதவிய எல்லோருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, சங்கம் இனிது நடைபெற மக்களின் ஒத்துழைப்பும், பொருளுதவியும் மிகவும் அவசியம் என்பதை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். நன்றி கூறிய பின்னர் 7-30 மணிக்குத் தேசிய கீதத்துடன் மாநாடு இனிது முடிவுற்றது.

[குறிப்பு: தலைவர் மாநாட்டுப் பிரசங்கம், ஆண்டு அறிக்கை, தீர்மானங்கள் முதலியன வெவ்வேறிடங்களில் பிரசுரிக்கப் பட்டுள்ளன.]

—(o)—

16—6—1957 ஞாயிறு பகல் 3 மணிக்குச் சென்னை பார்க் டவுன் மெமோரியல் ஹாலில் நடைபெற்ற சென்னை ராஜ்ய பருவத ராஜகுல (உள்நாட்டு மீனவர்) 26-வது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

1. பருவதராஜகுலச் சிறுவர்களுக்குக் கல்வி சலுகை அளித்த அரசாங்கத்திற்கு இம்மாநாடு தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. மீன் தொழில்வள ஆலோசனைக் குழுவில் உள்நாட்டு மீனவர்களில் இருவரை மெம்பராகச் சேர்த்துக்கொண்டதற்கு இம்மாநாடு தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

3. அரசியலார் பிறப்பித்த 1-10-56 உத்தரவையும், 2-2-57 உத்தரவையும் உடனே ரத்து செய்வதோடு, பழையபடி

G.O. 200-யும் B.S.O. 211-யும் அமலுக்குக் கொண்டுவர வேண்டுமாய் இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. ஆறு, ஏரி, குளம் முதலிய எல்லா நீர் நிலைகளையும் மீன் இலாக்காவே எடுத்துக்கொண்டு, மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 5 வருட சராசரிக்குக் குத்தகை கொடுக்கவேண்டுமாய் இம்மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

5. மீன் இலாக்காவைத் தனியாகப் பிரித்து தனி அதிகாரியின்கீழ் நடத்தவேண்டுமாய் இம்மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

6. மீனவர்களின் சமூக நிலை, கல்வி, பொருளாதாரம் முதலியவைகளை விசாரணைசெய்து அதன் காரணங்களையும் தெரியப் படுத்தி ஆவனசெய்ய ஒரு குழுவை நியமிக்க வேண்டுமாய் இம்மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

7. மீனவ மக்கள் தேர்தலில் நின்று வெற்றிபெற முடியாத நிலையில் இருப்பதால் ஸ்தல ஸ்தாபனங்களிலும், சட்ட சபையிலும் இவ்வகுப்பினர்களுக்குத் தொழில் அடிப்படையில் தங்கள் தொழிலில் உள்ள குறைகளைத் தெரிவிக்க, ஒரு ஸ்தானத்தை ஒதுக்கித் தரவேண்டுமாய் இம்மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

8. மீன் மார்க்கட்டுகளை மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு 5 வருட சராசரி குத்தகைக்குக் கொடுக்க உத்தரவிட வேண்டுமாய் இம்மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

9. மீனவர்கள் செய்யும் கருவாடு வியாபாரத்திற்கு மற்ற இராஜ்யங்களைப்போல விற்பனை வரியை நீக்கித் தரவேண்டுமாய் இம்மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

10. செங்கற்பட்டு வடஆற்காடு ஜில்லாக்களைச் சேர்த்து ஆரம்பிக்கப்பட்ட மீனவர் கூட்டுறவு சம்மேளனத்தை (Fishermen Co-operative Society Federation) உடனே பதிவுசெய்து அமலுக்குக் கொண்டுவர வேண்டுமாய் இம்மாநாடு மீன் இலாக்காவைக் கேட்டுக்கொள்ளுகிறது.

11. சென்னை அரசாங்கத்தாரால் திருத்தி அமைக்கப்பட்ட பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் உள்ள சமூகத்தினர்கள் எண்ணிக்கை அடிப்படையில் தொழில் கல்லூரிகளிலும், கலைக்கல்லூரிகளிலும் அரசாங்க உத்தியோகங்களிலும் ஸ்தலஸ்தாபனங்களிலும் ஸ்தானங்கள் ஒதுக்கித்தர வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

12. இம்மரபினர்களில் மிகக்குறைந்த தொகையுள்ளவர்கள் படித்திருந்தும் அவர்களும் வேலையின்றித் திண்டாடுவதால் உத்தியோகத் துறையில் பிற்பட்ட (மிகவும் தாழ்த்தப்பட்ட) வகுப்பினர்க்குரிய எல்லாச் சலுகைகளையும் கொடுத்து உதவும்படி இம்

மாநாடு மத்திய அரசாங்கத்தையும் மாகாண அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்ளுகிறது.

13. மீனவர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மீன் இலாக்காவில் குறைந்தது 50 சதவீத உத்தியோகத்தையும் ஆபீசர் பதவியையும் மீன் தொழில்புரியும் இம்மரபினர்களுக்கே கொடுத்து உதவவேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

14. மீன் இலாக்காவால் நடைபெற்றுவரும் மீன் சம்பந்தமான பயிற்சி வகுப்பில் 75 சதவீதம் இம்மரபினர்களுக்குப் பயிற்சி தரவேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

15. சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூக்காவில் உள்ள மீனவ மக்கள் குடியிருக்க வீடில்லாமையால் அரசாங்கத்தார் ஒரு காலனி ஏற்படுத்தி மீனவர்களைக் குடியேற்ற வேண்டுமாய் இம்மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

16. அடையாறு குறுக்கே இன்ஜினீரிங் காலேஜ் பின்புறம் அணைகட்டி தண்ணீர் தேங்கியிருப்பதால் மீன் கிடைக்காமலும், தண்ணீர் துர்நாற்றமெடுத்தும் இருப்பதால் அணையில் துவாரம் எடுத்து தண்ணீர் போகவர ஏற்பாடு செய்யவேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

17. அடையாறு நாராயணசாமி தோட்டத்தில் குடியிருக்க இடவசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுவதால் குடியிருக்க வசதி செய்து தரும்படி இம்மாநாடு அரசாங்கத்தினரைக் கேட்டுக்கொள்ளுகிறது,

18. காட்டுமன்னார்குடி ஹாஸ்டலுக்கு உள்ள கூரையை நீக்கி சிமெண்டு ஓடுபோடவேண்டியதற்குத் தகுந்த பொருளுதவி செய்யும்படி இம்மரபினர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

19. சென்னையிலாவது தஞ்சையிலாவது காலேஜ் படிக்கும் மாணவர்களுக்கு உபயோகமாக ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்த வேண்டுமாய் இம்மாநாடு மரபினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

20. விழுப்புரம் கருவாடு மண்டி சுமார் 40, 50 வருடங்களுக்கு மேலாக நல்லஸ்திரமான கட்டிடத்தோடு இருக்கிறது. விழுப்புரம் முனிசிபாலிட்டியார் அதை அப்புறப்படுத்தும்படி சொல்வது நேர்மையல்ல. ஆகையால், அந்த இடத்திலேயே அது நீடித்திருக்க உத்தரவிட வேண்டுமாய் இம்மாநாடு அரசியலாரையும் விழுப்புரம் முனிசிபாலிட்டியாரையும் கேட்டுக்கொள்ளுகிறது.

வாலாஜாபேட்டை மீன் பிடிப்போர் கூட்டுறவு சங்கத்தின் தீர்மானங்கள் :

1. 1956ம் ஆண்டு பூண்டி ஏரியின் மாசூலைப்பிடிக்க ரெவின்யூ போர்டின் உத்தரவு கிடைத்தும் காரணமில்லாமல் திடீரென்று ஸ்டே ஆர்டர் போட்டு, தண்ணீர் வடிந்ததும் மாசூலை ஊரார்

கொள்ளை அடித்த பிறகு ஸ்டே ஆர்டர் ரத்துசெய்ததால் சொஸைட்டிக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ. 1961—5—0-க்கு ஈடுசெய்ய வேண்டும் என்று 1956 மே மாதம் 21ந் தேதி கவர்ன்மெண்டுக்கு எழுதியதற்கு நாளது வரையில் பதில் இல்லை. உடனடியாக விசாரித்து சொஸைட்டிக்கு நஷ்டஈடு கொடுப்பதுடன் ஏரியைக் கொள்ளை அடிக்க முக்கிய காரணமாக இருந்த கிராம முனிசீப் பேரிலும் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என சென்னை அரசாங்கத்தை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

2. கவர்ன்மெண்ட் உத்திரவு G.O. No. 1237 D/16-4-57 படி பூண்டி ஏரியை ஏலம் போடக்கூடாது என்ற உத்திரவையும், அடிஷனல் டைரக்டர் திரு. S. அருள்தாஸ் I.A.S., அவர்கள் பூண்டி ஏரியை பகிரங்க ஏலத்தில் போடாமல் சொஸைட்டிக்கே G.O. 1237 படி கொடுக்கவேண்டும் என்று எழுதிய உத்திரவையும், 26-4-57-ல் வாலாஜாபேட்டை தாசில்தாரிடம் காண்பித்தும் அவர் எங்கள் சொஸைட்டியைக் கெடுக்கவேண்டும் என்று அநீதியாக 27–4–57ல் பகிங்ரக ஏலம் போட்டதையும், அளந்தல், இலுப்பந்தாங்கள் ஏரியை சொஸைட்டிக்கு ரூ. 3C-க்கு விடும்படி 28-4-57-ல் கேட்டும் பகிரங்க ஏலத்தில் ரூ. 8—8—0-க்கு தன் இஷ்டப்படி தாசில்தார் விட்டிருப்பதையும் இம்மாநாடு கண்டிப்பதுடன் உடனடியாக விசாரணை செய்யவேண்டும் என்று வேலூர் கலெக்டர் அவர்களையும், சென்னை அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்ளுகிறது.

3. 25-5-57ல் வேலூர் கோவாப்பரேடிவ் இன்ஸ்பெக்டர் பூண்டி ஏரியைப்போய்ப் பார்த்தபோது, முப்பந்தட்டி செம்படவர்களை ஏரியில் இறங்கி பூண்டி கிராமத்தார் மீன் பிடிந்ததைக்கண்டு அவர்களை இன்ஸ்பெக்டர் வீட்டிற்கு வரச்சொல்லிவிட்டுவந்தார். பிறகு அவர்கள் பேரில் ஒருவித நடவடிக்கையும் எடுக்காமையால் உடனடியாக விசாரணை செய்யவேண்டுமாக வேலூர் டிப்டி ரிஜிஸ்ட்ரார் அவர்களையும், சென்னை அரசாங்கத்தையும் இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

நன்றி

மறுமுறையும் என்னை மாகாண சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுத்தமைக்கும், சென்னை ராஜ்ய மீன்வள ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக ஏற்படுத்தியதைக் குறித்துப் பல வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அன்பர்களுக்கும் எமது நன்றிகலந்த வணக்கம் உரித்தாகுக.

29-6-57. V. M. நடேச நாட்டார், தலைவர்.

187253

கல்வி இலவச அறிக்கை.

பருவதராஜகுல மக்கள் கீழ்கண்ட கவர்ண்மெண்ட் ஆர்டரை அந்தந்த பள்ளிகளில் காட்டி சம்பளமில்லாமல் படிக்கலாம்.

Copy of G. O. Ms. No. 353 Dated 31—1—1957.

Harijan Welfare—Education—Backward Classes—Most Backward Communities—grant of educational concessions—Orders passed.

READ: From the Director of Harijan Welfare, Confdl. Letter No. 2381/55 D/18-5-56 Rc. No. 1355/E4/55 Dated 12-6-1956.

ORDER: The Government have had under consideration for some time a proposal to classify certain backward communities as "Most Backward Classes" for extending to them the educational concessions admissible to scheduled castes as they are found to be almost as backward as the scheduled castes, but could not be classified as such as they do not satisfy the criterion of untouchability. The Director of Harijan Welfare who was consulted, has agreed with the proposal and has submitted a list of communities which can be treated as "Most Backward" among the backward classes. The Director of Public Instruction has stated that apart from the fact that it is difficult to assess degree of backwardness the recognition of a most backward class among Backward classes will evoke endless protests and appeals and was therefore against the proposal.

2. The backward classes commission have, in their report, classified certain communities as Most Backward and have suggested that preference may be given to them over other communities in the list of backward classes for a grant of educational concessions etc. The Government have examined the proposals of the Director of Harijan Welfare in the light of the recommendations of the Backward Classes commission and accept the principal that some of the communities now classified as other backward classes in the state should be treated as most backward than the rest and given the special treatment generally extended to scheduled castes. The Government accordingly direct that the communities mentioned in the annexure to this order be classified as most backward classes among the other backward classes now recognised in this state and that they may be granted *for the present only the educational concessions* admissible to scheduled castes from the academic year 1957-58.

ANNEXURE.

List of most backward Communities within the list of Backward Classes:

1. Agnikula Kshatriya Palli Vanniakula Kshatriya. 2...............37. 38. PARVATHARAJAKULAM, Pattanavar, Sembadavar &c. 39...............................58. Navithans.

(True Copy)

வாழ்க காந்தீயம்

14—6—57-ல் கும்பகோணத்திற்கு விஜயம்செய்த

சென்னை மாநில முதலமைச்சர்

திரு. K. காமராஜ் அவர்களுக்கு

குடந்தை பருவதராஜகுல சங்கத்தார் வாசித்தளித்த

வரவேற்பு மடல்

அன்பே வருக! அமைச்சே வருக!
நண்பே வருக! நலமே வருக!
பண்பார் தமிழின் பண்பே வருக!
கண்ணார் ஒளியாம் காமராஜரே!
அண்ணலே! முதன்மை அமைச்சரே வருக!
எண்ணிய எண்ணியாங் கெய்திநேய் வருக!
நண்ணிய எங்களின் நலிவெலாம் நீக்கிட
திண்ணிய கல்வியைச் சீராய்ப் பரப்பிட
செந்நெறி வகுத்த சிறப்பே வருக!
மன்ன! வருக! மகிழ்க!

அண்ணலே! தங்கள் வரவு கண்டு மகிழ்ச்சியடைந்தோம். அறியாமையில் உழன்று பின்தங்கிய பருவதராஜகுல மக்களாகிய நாங்கள் கல்விச் செல்வம் பெற வசதியற்றவர்களாகிய எங்கள் மாணவர்களுக்குப் பகலுணவும் புத்தகமும் அரசினர் இனமாக வழங்கி ஆதரிக்கவேண்டுமென்று சேய் தாயிடம் கேட்பதுபோல் கேட்கின்றோம். தங்கள் கருணையுள்ளம் ஆதரவு கூறுமென்று நம்புகின்றோம்.

இங்ஙனம்

பருவதராஜகுல சங்கத்தார்

துக்காம்பாளையத் தெரு, குடந்தை.



BUY ALWAYS

OUR BEST QUALITY

FINE & DELICIOUS TO DRINK

COFFEE

RAW, ROAST & GROUND

OUR SCENTED NUTS—A SPECIALITY

Sawmy's Coffee Mfg., Co.,

262, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1.

PHONE No. 3687.

Phone: 3165 Grams: COCHUTNI

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

777 பிராண்டு

உணவு தயாரிப்புகள், சென்னை-1.

ரவா தோசை பவுடர்

<u>ரவா தோசை பவுடர்</u>

1½ டம்ளர் தண்ணீரில் 1 டம்ளர் ரவா தோசை பவுடரை கலந்ததும் தோசை சுடலாம். உப்பு, காரம் எதுவும் தேவை இல்லை. சட்டினியும் தேவையில்லை.

<u>சாம்பார் பேஸ்டினால் சாம்பார் செய்ய</u>

வெந்த பருப்பு தண்ணீரில் நபர் ஒன்றுக்கு ஒரு டீ ஸ்பூன் விகிதம் கலந்தால் போதும். உப்பு, புளி, மசாலா முதலியவை சேர்க்க தேவை இல்லை.

<u>ரசம் பேஸ்டு</u>: ஷை சாம்பார் போல் தயாரிக்கவும்.

<u>மதராஸ் கறி பவுடர்</u>: பிரிஞ்சி, குருமா, கறி, பொரியல் முதலியவைகளுக்கு சிறந்தவை.

Editor, Printer, Publisher: Sri V. M. Natesan, Goodland & Co., 55, Muthumari Chetty Street, Madras-1.